www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 கடகம் 20 (05.09.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு 40p


தமிழீழ மக்களே!
இது மௌனம் சாதிக்கும் நேரமல்ல!
தமிழீழத்துக்கான அங்கீகாரத்தைப்பெற எழுச்சியுடன் எழுவோம்!
ஓரணியில் திரள்வோம்!

# இலங்கையின் இனப்பிரச்சனை குறித்து
# ஐ.நா.நெருக்கமான ஆய்வு

இலங்கைத்தீவின் நிலைமை குறித்து ஐக்கிய நாடுகள் சபையினர் மிக நெருக்கமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகவலை, ஐக்கிய நாடுகள் சபையின் கிழக்காசிய பசுபிக் விவகார பிராந்திய அரசியல் விவகார இலாகாவின் இயக்குனர் பிரான்சிஸ் வெண்ட்ரல் வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில், யாழ். குடாநாட்டு மக்களின் நிலைமைகளை நேரில் அவதானிப்பதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான விவகார ஆலோசகர் ரோலன் கட்சன் குடாநாட்டிற்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு திரும்பியுள்ளார்.

இவர், "வடபகுதியில் நான் கண்டும் கேட்டும் அறிந்து கொண்ட நிலைமைபற்றி ஐநாவின் கவனத்துக்குக் கொண்டு வருவேன்" என வட பகுதி மக்களுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளார்.

இதற்கிடையில், சர்வதேச 'எக்கனோமிக்ஸ்' சஞ்சிகை "சுதந்திர வர்த்தகமும் பலிகளும்" என்ற கட்டுரையில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், சந்திரிகா என்றோ ஒருநாள் விடுதலைப் புலிகளுடன் பேசியே போரை முடிவுக்கு கொண்டு வருவார் என நம்புவதாக எழுதியுள்ளது.

தமிழீழ மக்கள், சிறீலங்காவுடனான பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையினை முற்றாக இழந்துவிட்டநிலை வடக்கில் காணப்படுவதாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் உதவியினை அவர்கள் வேண்டுவதாகவும் அவதானிகள் கருதுகின்றனர்.

யாழ் மக்களுடனான ஐ. நா ஆலோசகர் நடாத்திய பேச்சுக்களின் விபரம் வருமாறு:-

"தற்காலிக சமாதானமல்ல - நிரந்தரமான சயநிர்ணய உரிமையுடன் கூடிய சமாதானமே எமக்கு

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

## சர்வதேச மத்தியத்தத்திற்கு
## பீரிஸ் மறுப்பு

விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா பேச்சுவார்த்தை நடாத்த மாட்டாது எனவும், அத்துடன் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்தும்படி மூன்றாம் தரப்பினர் எவராவது மத்தியத்தத்தில் இறங்குவதையும் சிறீலங்கா அனுமதிக்காது எனவும், சிறீலங்காவின் நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜிஎல். பீரிஸ் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

ஆயுதப்படையினருக்கு அஞ்சியே பேச்சுவார்த்தைக்குச் சிறீலங்கா அரசு தயங்குகின்றது என்பதையும் ஆயுதப்படையினரை திருப்திப் படுத்துவதற்காகவே விடுதலைப் புலிகளுக்கு அதிகார பரவலாக்கல் யோசனைகளை அனுப்பி வைக்கவில்லை என்பதையும் பீரிஸ் மறைமுகமாக வெளியிட்டார். "இப்போது போர் செய்து கொண்டிருக்கிறோம். மீண்டும் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் இறங்கி குழப்பமானதொரு நிலையை ஏற்படுத்த முடியாது. இந்நிலையில் நாம் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் இறங்கினால் அது நாட்டுக்கும் ஆயுதப்படைகளுக்கும் நாம் செய்யும் நியாயமான காரியமாக இருக்காது. அதனால்தான் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கவில்லை" என்றார்.

## 8 சதவீதத்தினரே சந்திரிகாவின் யோசனைகளுக்கு முழு ஆதரவு

### முதலாவது கருத்துக் கணிப்பின் முடிவு

சிறீலங்கா சனாதிபதி முன்வைத்த அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை எட்டு சதவீத இலங்கையர்களே முற்றுமுழுதாக ஆதரிக்கிறார்கள் என்று சர்வதேச ஆய்வு நிறுவனம் நடாத்திய முதலாவது கருத்துக் கணிப்பு தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தையும் -கிழக்கு மாகாணத்தையும் தவிர்ந்த ஏனைய மாகாணங்களைச் சேர்ந்தவர்களிடையிலேயே இந்நிறுவனம் கருத்துக் கணிப்பு ஆய்வினை நடாத்தியது. 20 சதவீதமான மக்களே உண்மையில் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளைத் தெரிந்து வைத்திருந்தார்கள் எனவும், அதில் 52 சதவீதமானவர்களே யோசனைகளின் உள்ளடக்கங்களைத் தெரிந்து வைத்திருந்தனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக பார்க்கையில் யோசனைகளின் சகல அம்சங்களையும் பொறுத்தவரை, ஆதரிப்பவர்களை விட நிராகரிப்பவர்களே எண்ணிக்கையில் கூடுதலாக இருக்கின்றார்கள் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

### மணலாற்றில் புலிகளின் தாக்குதலையடுத்து
## கொக்கிளாயில் குடியேறியிருந்த மீனவர்கள் வெளியேற்றம்

கொக்கிளாய் பகுதியில் குடியேறியிருந்த சிங்கள மீனவர்கள் நீர்கொழும்பிற்கு இடம்பெயர்ந்துள்ளனர். அண்மையில் மணலாற்றில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, அச்சம் காரணமாக இச்சிங்கள மீனவக் குடியேற்ற வாசிகள் தமது சொந்த இடமான நீர்கொழும்பிற்குத் திரும்பியுள்ளனர்.

இவ்வாறு, நீர்கொழும்பு திரும்பிய இம்மீனவக் குடும்பங்கள் கத்தோலிக்க தேவாலயமொன்றில் தங்க வைக்கப்பட்டனர்.

கடற்றொழில் அமைச்சு மீனவர்களுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து, இவர்கள் இந்தத் தேவாலயத்தில் தங்க இணக்கம் காணப்பட்டுள்ளது. அமைச்சு இம்மீனவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கவுள்ளது.

அண்மையில் மணலாறு சென்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் இம்மீனவக் குடும்பங்கள் தம்மைத் தமது சொந்த இடமான நீர்கொழும்பிற்குக் கொண்டு சென்று விடுமாறு கோரியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 2 டோரா படகுகள் மூழ்கடிப்பு
### கப்பலில் தடுத்து வைக்கப்பட்டோர் விடுவிப்பு
### 24 க்கு மேற்பட்ட கடற்படையினர் பலி

**29.08.95** அன்று முல்லைத்தீவுக் கடலில், கரையிலிருந்து 3 கி. மீற்றர் தூரத்தில் சிறீலங்கா கடற்படையின் இரண்டு அதிவேகத் தாக்குதல் டோராப் படகுகள் விடுதலைப்புலிகளினால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டன. இவ்விரண்டு படகுகளும் இஸ்ரேலிய தயாரிப்புக்கள் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முதலில் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட டோராப் படகிற்கு என்ன நடந்ததென்று விசாரணை மேற்கொள்ள வந்த இன்னுமொரு டோராப் படகு மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் குறைந்தது 24 கடற்படையினர் கொல்லப்பட்டதாக அறியப்படுகின்றது. விசாரணை செய்யச் சென்ற படகில் இருந்த கடற்படை அதிகாரிகள் சிலரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

இத் துணிகரத் தாக்குதலை, கடற்புலிகளின் பெண்கள் அணியொன்றே செய்ததாகத் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப் படகுகளின் பாதுகாப்பில் வந்த 'ஐரிஸ் மோனா' என்ற கப்பலை வழிநடத்திச் சென்ற கடற்புலிகள், கப்பலுடன் முல்லைத்தீவுக் கடற்பகுதியிலே நிற்பதாகவும், அதில் சென்றோரில் பயணிகளைப் பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டு சென்று விடுவித்ததாகவும் தெரிய வருகிறது.

சிறீலங்கா அமைச்சும், ஈபிடிபியும் இணைந்து திருகோணமலைக்கும் காரைநகரிற்கும் இடையில்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## பொலநறுவையில் புலிகள் தாக்குதல்
### 18 படையினர் பலி

**03.09.1995** அன்று காலை பொலநறுவை மாவட்டத்தில் கல்கண்ட, சிங்கபுர என்ற கிராமங்களுக்கிடையில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் துணிகரமான ஓர் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் 18 க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுப் பலர் படுகாயம் அடைந்துள்ளனர் எனச் சர்வதேசச் செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இத் தாக்குதலானது அரை மணிநேரம் நீடித்ததாகவும் தாக்குதலின் இறுதியில் விடுதலைப் புலிகள்,

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெரும்பான்மையினருக்கு எதிராக அரசு செயற்படாது

## சிறீலங்கா பாராளுமன்றத்தில் ரத்வத்தை

"முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் சிறீலங்கா அரசின் இனப்பிரச்சினை தீர்வுக்குரிய யோசனைகள் மட்டுமே. அதற்கு இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒப்புதல் கிடைத்தாலேயே தீர்வுத் திட்டமாக நடைமுறைக்கு கொண்டு வருவோம்.'

இவ்வாறு சிறீலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை சிறீலங்காப் பாராளுமன்றத்தில் அவசரகால நிலைமையை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் விவாதத்தை முடித்து வைத்து பேசகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது: நாம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளை தீர ஆலோசனை செய்து அனைவரதும் ஒப்புதல் பெற்ற பின்னரேதான் நடைமுறைக்கு சாத்தியமான தீர்வாக அமுலுக்கு கொண்டுவருவோம்.

இதையிட்டு யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. வெவ்வேறு விதமான விமர்சனங்கள் கூறுவதில் பிரயோசனமில்லை.

வெளிப்படையாக கருத்துக்களை தெரிவியுங்கள். பெரும்பான்மையினரின் ஆதரவு கிடைத்தால் தான் இதனை நடைமுறைக்கு கொண்டுவருவோம்.

நாம் இவ்வாறு திட்டமிட்ட அடிப்படையில் தான் போரை மேற்கொள்கிறோம். என்ன திட்டத்தின் அடிப்படையில் என்பதை நான் இங்கு தெரிவிக்க விரும்பவில்லை.

12 ஆண்டுகளாக வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் நிலைமையை நான்கு மாதங்களில் மாற்றியமைக்க முடியாது. சிறீலங்கா இராணுவத்தினரில் ஒருசிறுபிரிவினர் இத்திட்டங்களை விரும்பவில்லை. கொழும்பில் இருந்து கொண்டு சகபோகங்களை அனுபவிக்க விரும்பும் இவர்கள்தான் எமக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர்' என்றார்.

# வடக்கு-கிழக்கு இணைப்பை மட்டுமல்ல எந்த மாகாண அமைப்பையும் சிங்களவர் ஏற்கார்

## —சிங்கள ஆரக்சக விதாயை

'வடக்கு-கிழக்கு இணைப்பை மட்டுமல்ல வேறெந்த மாகாண அமைப்பையோ அல்லது புதிய பிராந்திய சபைகளையோ அல்லது புதிய எல்லைகளையோ சிங்களவர்கள் ஒருபொழுதும் ஏற்க மாட்டோம். சிங்களவர்களாகிய நாம் இணைப்பு, பிராந்தியசபை, சமஸ்டி ஆகியவை, அவை எந்த வடிவில் வந்தாலும் எதிர்ப்போம். அவை எப்படி அழைக்கப்பட்டாலும் எதிர்ப்போம்'

இவ்வாறு சிங்கள பாதுகாப்பு இயக்க தலைவர் காமினி ஜயசூரியா சிறீலங்கா அரசின் அதிகார பரவலாக்கல் யோசனை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

'வடக்கு-கிழக்கு இணைப்பு பிரச்சினைகளை உருவாக்கும் எந்த வடிவிலான மாகாணசபை அமைப்பையும் சிங்களவர்கள் ஏற்க மாட்டோம். அது நாட்டின் ஐக்கியத் தன்மையை மீறிவிடுவதாக இருக்கும். புதிய எல்லைகள் அரசு செய்வதற்கு ஒன்றுமே இல்லாமல் செய்துவிடும். அது நாட்டின் பிரிவினைக்கு வழிகோலிவிடும். இதனை சிங்கள மக்கள் அனுமதிக்க மாட்டோம்' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# எமது இறைமை தீர்வுத் திட்டத்தால் எவ்வித பாதிப்பும் அடையாது

## — மீன்பிடி நீரியல் அமைச்சர் இந்திக குணவர்த்தன

"இன்றைய அதிகார பரவலாக்கல் திட்டத்தால் பாதுகாப்பு அதிகாரங்கள் முழுமையாக மாகாண மட்டத்துக்கு செல்லாது, காவல்துறை அதிகாரம் மட்டுமே, அதிகாரப்பரவலாக்கலின் கீழ் மாகாண அரசக்கு வழங்கப்படுகிறது. அதனால் எமது இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு எந்த வகையிலும் இடமில்லை'

இவ்வாறு சிறீலங்காவின் மீன்பிடி நீரியல் அமைச்சர் இந்திக குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், 'எமது இறைமைக்கு அச்சறுத்தலை ஏற்படுத்தும் அதிகார பரவலாக்கலை நாம் வன்மையாக எதிர்ப்பதுடன் அதற்கு எதிராக நாடு தழுவிய பிரச்சாரத்தையே மேற்கொண்டு மக்களை ஒன்று திரட்டுவோம்' என அம்பாந்தோட்டை சிறீலங்கா பாராளுமன்ற உறுப்பினர் நிகால் கலப்பத்தி கூறியுள்ளார்.

# தோட்டத் தொழிலாளர் மீது கெடுபிடி களுத்துறை மாவட்டத்தில் அதிகரிப்பு

களுத்துறை மாவட்ட தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் நாளுக்கு நாள் புதுப்புதுப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தோட்டங்களில் உறவினர்களைப் பார்ப்பதற்கு யாராவது புதியவர்கள் வந்தால் பொலிசாருக்குத் பிழையான தகவல்களைக் கொடுத்து, அப்பகுதியில் பதற்ற நிலையை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. தோட்டத்திற்குள் புகுந்து தொழிலாளர்கள் தாக்கப்படும் சம்பவங்களும் அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது. இத்தகைய சம்பவங்களின் போது தொழிலாளர்கள் எதிர்த்துத் தாக்கினால் புலிகள் எனப்பட்டம் சூட்டப்படுகிறது. இது தவிர, தோட்டங்களுக்குள் அத்துமீறிப்புகுந்து காடையர்கள் ஆடுகள், கோழிகள் போன்றவற்றையும் அபகரித்துச் சென்று விடுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகளையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமெனவும் இது தொடர்பாக தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் தொழிலாளர் வட்டாரங்கள் கூறுகின்றன.

# கொழும்பில் தொடரும் கொலைகள்

## தமிழர் ஈழம் நோக்கித் தள்ளப்படுவர்

## ஜே. வி. பி. இயக்கம் கூறுகிறது...

இனந்தெரியாத முறையில் தென்னிலங்கையில் தொடர்ந்துவரும் கொலைகளினால் தமிழீழத்தை எதிர்ப்பவர்கள்கூட அதனை ஆதரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இவ்வாறு ஜே. வி. பி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: வாவிகளிலும், ஆறுகளிலும் கிடைக்கப்பட்ட சடலங்கள் இரத்தவெறி பிடித்த ஏதோ ஒரு குழுவினால் தான் செய்யப்படுகின்றது. இது தடுக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழருக்கு எதிராகப் போரிட ஈ.பி.டி.பி குழுவிற்கு ஆயுதம்! இராணுவத்திற்கு உதவுமாறும் அரசு கோரிக்கை

விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிட, படையினருக்கு உதவுமாறு தமிழ்க் குழுக்களிடம் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கோரியுள்ளதாகச் சில செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ்க் குழுக்களின் ஆதரவை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கோரியுள்ளதாகவும்,

விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிட ஈபிடிபிக்கு சிறீலங்கா அரச ஆயுத உதவி செய்துள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# தீர்வுத் திட்டத்தினை சிங்களவர் ஏற்க முடியாது

## எதிர்விளைவுகளை சிறீலங்கா அரசு விரைவில் அனுபவிக்கும்

## சோபித்த தேரோ எச்சரிக்கை

"சிறீலங்கா ஒரு சிறிய நாடு இதனுள்ளே 9 அரசுகள் (மத்திய அரசுடன்) இருக்க வழியில்லை. இந்த நாட்டில்பல அரசுகளை பராமரிக்க முடியாது. எனவே இந்த ஆலோசனைப் பட்டியலில் காணப்படும் பிராந்திய சபை எமது நாட்டுக்குப் பொருத்த மற்றது' இவ்வாறு கோட்டை சிறிநாக விகாரபதி மாதுலவாவே சோபித்த தேரோ தெரிவித்துள்ளார்.

சமார் ஆயிரம் ஆண்டுகளாக நிலவிவரும் ஐக்கியத்தை அழித்துவிட்டு பிரித்துக் கொடுக்கக்கூடியளவிற்கு இந்த நாட்டில் ஏதுமில்லை. அவ்வாறு செய்தால் அதன் எதிர்விளைவுகளை அரசு விரைவில் சந்திக்க நேரும்' எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

# தமிழர் மீது குண்டு வீசுவதை நிறுத்த இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும்!

## மாநிலங்கள் அவையில் தமிழக கட்சிகள் வலியுறுத்து

இலங்கையில், தமிழ் மக்கள் மீது - சிறீலங்கா அரச நடத்தும் குண்டுவீச்சத் தாக்குதல்களை நிறுத்துவதற்கு இந்திய அரசு, சிறீலங்கா அரசமீது அரசியல் நிர்ப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும் என இந்தியப் பாராளுமன்றத்தின் ராஜ்ய சபையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த பல கட்சிகளினதும் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் ராஜ்யசபையில் இலங்கை பிரச்சினை குறித்து பிரஸ்தாபித்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரான மிசா கணேசன் தனது உரையில்,

விடுதலைப் புலிகளுடன் நேரடியாக சிறீலங்கா இராணுவம் போரிட வேண்டும். அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை நிறுத்த இந்திய அரசு சிறிலங்காவுக்கு அழுத்தங்களை தரவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இவருடன் இன்னுமொரு திராவிட முன்னேற்றக் கழக ராஜ்யசபை உறுப்பினரான கே. கே. வீரப்பனும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரான முத்துமணியம் இவ்விடயத்தை வலியுறுத்தி உரையாற்றினர்.

இதேவேளை இலங்கையில் தமிழர்கள் கண்மூடித்தனமான சிறிலங்காப் படையினரின் தாக்குதல்களால் கொல்லப்படுவது குறித்து தமிழ்நாட்டின் பல அரசியல் கட்சிகள் கண்டனப் பேரணிகளையும், ஆர்ப்பாட்டங்களையும் தொடர்ந்தும் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழக இளைஞர் சமூகம் புலிகளையே ஆதரிக்கிறது!

"தமிழ்நாட்டின் இளைஞர் சமூகம், 'தமிழீழம்' என்ற கொள்கைக்கும் அதற்காகப் போராடும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவாகவே உள்ளனர்' என மறுமலர்ச்சி திமுக பொதுச்செயலர் வை. கோபாலசாமி பி. பி. சி செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா இராணுவம் முழு அளவிலான நடவடிக்கையை ஆரம்பித்தால் அதற்கெதிரான - ஆனால் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஒருநிலை தமிழ் நாட்டில் ஏற்படுவது தவிர்க்க முடியாது என 'துக்ளக்' சஞ்சிகையின் ஆசிரியர் சோ. இராமசாமி தெரிவித்தார். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமானால் அது பொதுமக்களின் அழிவிற்கே வழிவகுக்கும். இது தமிழ் நாட்டில் உள்ள தமிழ் மக்களில் பாதிப்பை ஏற்படுத்தும், இது சிறீலங்கா அரசிற்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு ஆதரவானதுமான ஒரு போக்கை ஏற்படுத்தும். 'விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் காவலர்கள்' என்ற ஓர் தோற்றப்பாடும் எழும் என சோ. இராமசாமி மேலும் தெரிவித்தார். இக்கூற்று உண்மையானது என்பதை, இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தால் சிறீலங்கா அரசும் இந்திய அரசும் உணரக்கூடும் என இது குறித்து கருத்துத் தெரிவித்த ஜோர்ஜ் ஆர்னி குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விழிப்புடன் எழுவோம்!

சிறீலங்கா அரசு, தனது வரவு செலவுத் திட்டத்தினூடாக ஆண்டொன்றுக்குச் சராசரி 2,500 கோடி ரூபாக்களைப் பாதுகாப்புச் செலவீனங்கள் என்ற பெயரில், இலங்கைத் தீவில் உள்ள தமிழர்களை இன அழிப்புச் செய்வதற்கும் அடக்கி ஒடுக்குவதற்கும் செலவிட்டு வருகின்றது.

அதேவேளையில் 'இனப்பிரச்சினையைப் போரின் மூலம் தீர்த்து விடலாம் என்று கருதுவது முட்டாற்தனமானது என்று கூறிக்கொண்டே, உலகை ஏமாற்றும் நோக்குடன், வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களையோ அன்றி விடுதலைப்புலிகளையோ கலந்தாலோசிக்காது தன்னிச்சையாக, அதிகாரப் பரவலாக்கல் எனும் தீர்வுத்திட்ட யோசனையைச் சந்திரிகா வெளியிட்டுள்ளார்.

மறுபுறம், விடுதலைப்புலிகளை அழிப்பதன் மூலமே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தலாம். அதனால் இது விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரேயன்றி, தமிழ் மக்களுக்கு எதிரான போரல்ல எனக்கூறிக்கொண்டு, யாழ் குடாநாடு மீதான முழு அளவிலான தாக்குதலுக்குரிய சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றார் சந்திரிகா.

சமீபத்தில் அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் அளிக்கப்பட்ட தீர்ப்பில், இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீதான 'துன்புறுத்தல்கள்' விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையிலான போரினால் ஏற்படவில்லை. இது 1948ஆம் ஆண்டில் இருந்தே தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவோ அல்லது நாடற்றவர்களாகவோ மாற்றும் நோக்கிற்காகவே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே தமிழர்கள் 'துன்புறுத்தலுக்கு உள்ளாகும் இனமாகவே' காணப்படுவதினால், அவர்களினது அரசியற் தஞ்சம் கோரும் மனு ஏற்கப்பட வேண்டும் என்பது இந் நீதிமன்றத்தின் முடிவு எனக்கூறப்பட்டுள்ளது.

தமிழீழ மக்கள் புதிதாக ஒரு நாட்டைக் கோரவில்லை. தமது பாரம்பரிய தாயகத்தில் சிறீலங்கா மேற்கொள்ளும் இன அழிப்பிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகவே விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ், ஆயுதப் போராட்டத்தினை நடாத்துகின்றனர். இதனாற்தான் மக்களே, விடுதலைப் புலிகளாகி நிற்கின்ற தன்மை அங்கு காணப்படுகின்றது. சிறீலங்கா அரசு கூறுவது போல் மக்கள் வேறு, விடுதலைப் புலிகள் வேறல்ல.

இந்நிலையில், தமிழீழ மக்களின் நியாயமான தேசிய விடுதலைப் போராட்டத்தினையும், அதனைத் தலைமை தாங்கி நடாத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அனைத்துலகும் ஏற்க வேண்டும். அப்பொழுதுதான், சிறீலங்கா தனது தேசிய பாதுகாப்புக்கு எனக்கூறிக கொண்டு, த்மிழீழ மக்கள் மீதும் தமிழீழத் தேசத்தின் மீதும் நடாத்தும் குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள், அப்பட்டமான தமிழின அழிப்பு முயற்சிகள் என்பது உலகிற்கு வெளிச்சமாகும். தமிழர்களுக்கு வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல, இலங்கை முழுவதுமே பாதுகாப்பில்லை என்பதை, கொழும்பைச் சுற்றியுள்ள வாவிகளில் கழுத்து நெரிக்கப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, வீசப்பட்டு மிதக்கும் தமிழர்களின் உடல்கள் இடித்துரைக்கின்றன.

ஆகவே, இலங்கைத்தீவில் எந்தப்பகுதியிலும் தமிழர்களுக்கு நன்கு இனங்காணக்கூடிய உயிர் அச்சுறுத்தல் நிலவுவதால், இந்தச் சூழ்நிலைமாறி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை, உலகெங்கும் உள்ள தமிழ் அகதிகளை அந்நாட்டு அரசுகள் திருப்பியனுப்பக் கூடாது அனைத்து உலகமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையும், விடுதலைப்புலிகளையும் அங்கீகரியுங்கள் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஜெனிவாவில் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஐ.நா.விடம் மகஜர் கொடுத்தனர்.

இதே நோக்கத்திற்காகப் புரட்டாதி 9ஆம் நாள் இலண்டனில் பெரும் எழுச்சிக் கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது. இதற்காகவே, கனடாவில் 25,000 பேரும் ஜெனிவாவில் 12,000 பேரும் அணிதிரண்டனர்.

அதனால், என்ன வேலை இருப்பினும், எங்கு இருப்பினும் மறவாது இவ்வெழுச்சிக் கூட்டங்களில் பங்குபற்றி, எமது விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப்புலிகளையும் அங்கீகரியுங்கள், சிறீலங்காவின் தமிழினப் படுகொலையை நிறுத்த முயலுங்கள் எனச் சர்வதேச சமூகத்தைக் கேட்க வேண்டியது, ஒவ்வொரு புலம் பெயர்ந்த தமிழனதும் பிரதான கடமையாகும்.

# அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் கொழும்பு விஜயம்

சிறீலங்கா அரசின் மனித உரிமைகள் தொடர்பாகத் தாம் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதால் ஆபத்து விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் எதனையும் அமெரிக்கா சிறீலங்காவுக்கு விற்பனை செய்யாது.

இவ்வாறு அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளரான திருமதி றொபின் ரபாயஸ் தெரிவித்துள்ளார். கொழும்புக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளை உத்தியோக பூர்வமாகப் பயங்கரவாதிகள் என்று அழைக்க முடியாது என்று ஆணித்தரமாக தெரிவித்துள்ளார். சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் வகை தொகையின்றி எவ்வித காரணங்களும் இல்லாமற் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அரச படைகளாற் கைது செய்யப்படும் அப்பாவிப் பொதுமக்கள் பலர் காணாமற் போவதும், குறிப்பாக அரசின் உளவுத்துறை அதிகாரிகளாற் தமிழர்கள் 21 பேர் அவர்களின் தலைமை அலுவலகத்தில் வைத்தே கழுத்து நெரித்து கொலைசெய்யப்பட்டதைக் கவனத்திற் கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில், சிறீலங்காவில் நிகளும் மனித உரிமைகள் மீறல் எப்போதும் தமது ஆழ்ந்த கவனிப்பிற்கு உட்பட்ட விடயமாகவே இருக்கும் என்று தெரிவித்தார்.

அதேவேளை இவர் அங்கு நின்றிருந்த வேளையிலும் போலிக் குற்றச்சாட்டை வைத்து ஒரு தமிழ் இளைஞரைச் சிறீலங்காப் பொலிசார் கைது செய்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# எமது இனத்தின் வாழ்விற்காக எம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம்

## தனது வங்கி வைப்பு முழுவதையும் பாதுகாப்பு நிதிக்களித்த வயோதிபர்

தமிழீழ விடுதலைப் போர் இன்று ஓர் இறுதிக் கட்டத்தை-தமிழீழத்தை-தொட்டு நிற்கிறது. இந் நிலையில் இப்பேராட்டம் வலுவுடன் நடைபெறுமேயானால் நாம் விரைவில் ஒரு சுதந்திர, மனநிம்மதியான வாழ்வை நடாத்த- எமக்கென்றோர் நாடு உருவாகிவிடும். அதற்கு எம்மாலான அனைத்தையும் செலுத்த வேண்டிய கடப்பாடு எங்கள் எல்லோருக்கும் உண்டு. அந்த வகையிலேயே நான் சிறுகச் சிறுக சேமித்து வைத்திருந்த முழுப்பணத்தையும் தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு வழங்கினேன் என்றார் கைதடி சாந்தி நிலையத்தில் வசிப்பவரான திரு. சு. குமாரசாமி என்ற வயோதிபர். தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு தனது தள்ளாத வயதிலும் தான் சிறுகச் சிறுகச் சேமித்து வங்கியில் வைப்பிலிட்டு வைத்திருந்த 12 ஆயிரம் ரூபாவையும் வழங்கியதுடன் தமது மாதாந்த ஓய்வூதியத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையை மாதா மாதம் வழங்க முன்வந்த இவரை செவ்வி கண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு நீங்கள் விரும்பி உங்கள் வைப்பில் இருந்த பணம் முழுவதையும் வழங்கி உள்ளீர்களே, உங்களுக்கு தமிழீழ பாதுகாப்புக்கு நிதி வழங்கவேண்டும் என்ற உந்துதல் எவ்வாறு வந்ததென கேட்டபோது,

"மன்னிக்க வேண்டும் நான் பேர் புகழுக்காகவோ, செய்தித்தாளில் பெயர் வரவேண்டும் என்பதற்காகவோ தமிழீழ பாதுகாப்புக்கு நிதி வழங்கவில்லை. அது செய்தித்தாளில் வருவதை நான் அறவே விரும்பவில்லை. என் மனதிற்கு பட்டபடி எனது சமுதாயம் வாழ எனது பங்களிப்பை செய்தேன். அவ்வளவுதான்" என்றவரை ஒருவாறு இணங்க வைத்து அவரின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு தொடர்ந்து அவரிடம் அதுபற்றி உரையாடிய போது,

"இன்று நேற்றல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவான காலம் முதல் என்னால் ஆன சிறுசிறு பங்களிப்பு வழங்கி வந்தேன்.

எப்படியாயினும் இந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு என்னால் செய்யக்கூடியது ஏதுமிருந்தால் செய்யவேண்டம் என்று காத்திருந்தேன். அண்மையில் செய்தித்தாளில் தமிழீழ பாதுகாப்பிற்கு பெரும் நிதி தேவைப்படுவதாக செய்தி வெளியாகி இருந்தது, அதைப் பார்த்ததும் உடனடியாக நிதிசெலுத்த வேண்டுமென தீர்மானித்தேன். ஆனால் என்னால் செல்லமுடியாது. எனவேு நிதித்துறைக்கு எனது விருப்பத்தை தெரிவித்து ஒரு கடிதம் எழுதினேன். அவர்கள் வந்தார்கள். எனது பெயரில் வைப்பகத்தில் வைப்பலிருந்த 12 ஆயிரம் ரூபாவையும் அவர்களை எடுக்குமாறு கூறி அவர்களிடம் அதற்கான ஆவணங்களை கொடுத்தேன் என்றார். அவர் மேலும் கூறும் போது,

காணி, பூமி, பணம் எல்லாம் வைத்திருக்கிறீர்கள். சிறீலங்கா இராணுவம் வந்து அவற்றை அபகரித்துக் கொண்டு சென்றால் உங்களுக்கு சந்தோசமாக இருக்குமா! அந்தகாலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதை நீங்கள் தடுக்க வேண்டுமானால் இராணுவத்தின் துன்புறுத்தலில் இருந்து உங்களையும், உங்கள் பிள்ளைகளையும், உங்கள் மண்ணையும் பாதுகாக்க வேண்டுமானால் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களிடம் உள்ள சொத்துக்களின் ஒரு பகுதியையாவது நீங்களாக முன்வந்து தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு வழங்க வேண்டும். இதன்மூலம் நீங்கள் மனநிம்மதி பெறுவதுமல்லாது உங்கள் குடும்பம் உறவுகளை பாதுகாப்புடன் இந்த மண்ணையும் பாதுகாத்தவர்களாவீர்கள்.

எனவே உங்கள் முன்னே உள்ள அழிவை பார்த்துக் கொண்டும் சொத்துக்களை இறுகப் பற்றி வைத்திருந்து என்ன பயனை அடையப்போகிறீர்கள் - இது பொய் அல்ல, உண்மையையே நான் சொல்கிறேன். நீங்கள் இன்னும் காலதாமதம் செய்யாமல் உடனடியாக உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள். இந்தச் சந்தரபபத்தை நீங்கள் தவறவிடுவீர்களேயானால் உங்களையும், உங்கள் உறவுகளையும் ஏன் உங்கள் மண்ணையும் நீங்கள் இழக்க நேரிடும்.

நான் வாழ வேண்டும் என்பதற்காக தமிழீழ பாதுகாப்பு நிதி வழங்கவில்லை. என்னுடைய இனம் எமது இளம் சந்ததி தொடர்ந்தும் இன்னல்களை அனுபவிக்கக்கூடாத. எமக்கென்றோர் நாடு வேண்டும் என்பதற்காகவே எனது சேமிப்பில் இருந்தது சிறுதொகையாக இருந்தாலும் முழுத்தொகையையும் வழங்கியுள்ளேன்" என்றார் அவர்.

## சிறீலங்கா அதரடிப்படையின் தலைமை அலுவலகத்தில்

# 21 தமிழ்ப் பொதுமக்கள் கழுத்து நெரித்து கொலை

சிறீலங்காவின் எஸ்.ரி.எவ். எனப்படும் பொலிஸ் அதிரடிப் படையின் கொழும்புத் தலைமை அலுவலகத்திற் கழுத்து நெரிக்கப்பட்டு 21 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அதன் பொலிஸ் அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனாலும் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உடல் சிதைக்கப்பட்ட சடலங்கள் 30க்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் 30க்கும் 40க்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள். இவர்கள் எதுவும் அறியாத அப்பாவித் தமிழ் மக்கள், சந்தேகத்தின் பேரிற் கொழும்பிலுள்ள விடுதிகளிலும் பயணம் செய்யும் போதும் கைது செய்யப்பட்டு, எதுவித விசாரணையும் மேற்கொள்ளாமற் தடுத்து வைத்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்படடவர்கள் பாவிக்கப்படாத மலசல கூடத்தினுள், பிளாஸ்ரிக் வயர்களினாலும், பிளாஸ்ரிக் கைவிலங்கினாலும் கழுத்துச் சுற்றப்பட்டு விடப்பட்டனர், அணுவணுவாகச் சாகடிக்கப்பட்டனர் எனவும் விசாரணைகள் மூலம் தெரியவருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாடு பிரிந்து விட்டது அதை ஒன்றாக்கவே இவ் யோசனைகள் ''வடக்கு-கிழக்கை இணைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை''

## —சிறீலங்காவின் அரசியல் திட்ட அமைச்சர் பீரிஸ்

''இன்று நாடு இரண்டாகப் பிரிந்து காணப்படுகிறது. இந்த இரண்டாக பிளவுபட்ட நாட்டை ஒன்றாக்கவே இந்த அதிகாரப் பரவலாக்கல்"

இவ்வாறு சிறீலங்காவின் அரசியல் திட்ட, நீதி அமைச்சரான பேராசிரியர் பீரிஸ் வெண்தாமரை இயக்கத்தின் கொழும்பு மாவட்ட குழுவின் கூட்டத்தில் மக்களுக்கு உறுதியளித்தார்.

"சிலர் நாடு இன்று ஒன்றாக இருப்பது போலவும் அதனை அரசு எட்டு கூறுகளாகப் பிரிக்கப் போவதாகவும் கூறுகிறார்கள். உண்மைநிலை அதுவல்ல.

வடக்கு-கிழக்கில் நிருவாகம் இப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் கையில்தான் உள்ளது. வடக்கில் வாழும் ஒருவர் கொழும்புக்கு வரவேண்டுமானால் விடுதலைப் புலிகளின் அனுமதிப் பத்திரத்தை பெற்றேயாக வேண்டும். இங்கிருந்து செல்வோரும் அவர்களின் அனுமதியைப் பெற்றே செல்லவேண்டும். இது தான் இன்றைய யதார்த்தம். இந்த நாட்டில் சிறீலங்கா அரசு அனுமதிக்காவிட்டாலும் இரட்டை ஆட்சி நடக்கிறது.

இந்த இரட்டை ஆட்சி முறையை ஒழிக்கவேண்டும், அதனை எவ்வாறு சாதிக்க முடியும் என்பதே எமது சிந்தனை. சர்வதேச உதவியில்லாமல் போரில் வெற்றிகொள்ள முடியாது.

போரை போரினால் வெல்லுதல் மட்டும் போதாது. பிரச்சினைக்குரிய பரிகாரம் ஒன்றையும் காணவேண்டும். இந்த இருவிடயங்களிலும் எமது அணுகுமுறை சரியாக இருப்ப தினாலேயே சர்வதேச நாடுகள் எமக்கு உதவி புரிய முன்வந்துள்ளன. சில நாடுகள் உலங்குவானூர்திகள் போன்றவற்றை இனாமாகத் தர முன்வந்துள்ளன. சில நாடுகள் மலிவான முறையில் ஆயுதங்களைத் தருகின்றன." இவ்வாறு பீரிஸ் கூறியுள்ளார்.

# இன்ஸ்பெக்டர் ஏற்றத்தில் 10 பொதுமக்கள் கைதாகினர்

## பி.பி.சி. வெரித்தாஸ் செய்தி கேட்கக்கூடாதென மிரட்டல்

பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றக் கிராமத்தைச் சுற்றி வளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் பாலகர் உட்படப் பத்துப் பேரைக் கைது செய்து முகாம் கொண்டு சென்றனர்.

நேற்று முன்தினம் மேற்படி கிராமத்தைத் திடீரெனச் சுற்றி வளைத்த படையினர் அப்பகுதி மக்களை வெரித்தாஸ் மற்றும் பிபிசி செய்திகளைக் கேட்கக் கூடாதென எச்சரித்ததுடன் அவ்வாறு கேட்கும் பட்சத்தில் காதிற்குள் பேனாவை வைத்து அறைந்து விடுவோம் எனவும் கூறினர்.

இதன் பின்பு செங்கல் வெட்டும் தொழிலாளர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் கைது செய்து முகாம் கொண்டு சென்றனர்.

சுற்றி வளைத்த படையினர் வண்ணமணி மகேந்திரன் (வயது 25), இவரது மனைவி அரிகாரம் ஜானகி (வயது 23) இவர்களது ஒரு வயதுக் குழந்தை உட்பட அரிகாரம் பெரியதம்பி (வயது 19) யோகராஜா கஜேந்திரன் (வயது 20), வே. இராசையா, பே. சமணதாசன், இ. இராமலிங்கம், பி. லோகநாதன், த. லோகநாதன் ஆகியோரைக் கைது செய்தனர்.

# தற்காப்பு நிலையில் கூட இராணுவத்தினர் இல்லை

## —யுக்திய தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்து சிறீலங்கா இராணுவத்தினர் தம்மைத் தற்காத்துக்கொள்ளும் நிலையிற் கூட இல்லை என யுக்திய சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

3-ம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட உடனேயே சிறீங்கா இராணுவத்தினர் யுத்த களத்திலே யுத்த சமபலத்தை இழந்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. அத்துடன் அரச படைகள் தொடர்ந்தும் தோல்விகளை எதிர் கொண்டு வருவதால் அரசியற் தீர்வொன்றிற்கு மக்களை அழைக்க முடியாத நிலை ஏற்படும் எனவும் யுக்தியவின் ஆசிரிய தலையங்கத்திற் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலனாய்வுப் பிரிவுப் பொலிஸ் சுட்டுக் கொல்லப்பட்டார்

திருமலைப் பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் இனம் தெரியாதோராற் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த 24-ம் திகதி திருமலை சிவன் கோவில் வீதியில் பொலிஸ் காவலரணுக்கு சமீபமாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை இவர் சுடப்பட்டார்.

சுடப்பட்ட சதாசிவம் புவனேந்திரன் (வயது 32) என்னும் பொலிஸ் கான்ஸ்டபிள் சூட்டுக் காயத்துடன் பொலிஸ் நிலையம் நோக்கி சுமார் நூறு யார் வரை ஓடி வீதியில் வீழ்ந்ததாகவும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் அவர் அங்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மக்களைச் சித்திரவதை செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை தேவை

## — மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை

முன்னோக்கிய பாய்ச்சல் நடவடிக்கையின் போது அப்பாவி மக்களைப் பயங்கரவாதிகள் எனக் கூறிப் படையினர் கைது செய்து மிக மோசமான சித்திரவதைக் குள்ளாக்கியுள்ளனர். இதற்குக் காரணமான படையதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித உரிமை அமைப்புக்கள் சிறீலங்கா ஜனாதிபதியைக் கேட்டுள்ளன.

இதில் தொடர்புள்ள படை அதிகாரிகள் உயர்பதவி வகிக்கின்றனர். இவர்கள் இவ்வாறு பதவியில் இருப்பதே ஒரு மனித உரிமை மீறலென மனித உரிமை அமைப்புக்கள் கூறியுள்ளன.

இவ்விராணுவ அதிகாரிகள் மீது விசாரணை மேற்கொண்டு அவர்களைப் பதவி நீக்க வேண்டுமென மனித உரிமை அமைப்புக்கள் நேற்று முன்தினம் கண்டன அறிக்கை ஒன்றைச் சிறீலங்கா ஜனாதிபதியிடம் கையளித்தன.

# மோதல்கள் மீண்டும் தொடர்வதால் வாழ்க்கைச் செலவு பல மடங்கு உயரும்

## - பொருளியல் ஆய்வாளர் கருத்து

விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே மீண்டும் மோதல்கள் ஏற்பட்டுள்ளமையால் வாழ்க்கைச் செலவு பல மடங்கு உயருமெனப் பொருளாதார ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரிப்பும், தனியார்துறையின் பணம் திசை திருப்பப்படுவதும், இறக்குமதிகள் அதிகரிக்கப் படுவதும் அந்த நிலைமைக்கு இட்டுச் செல்லுமென அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இப்பிராந்தியப் பொருளியல் ஆய்வாளர்கள் மேலும் கூறுகையில், மேற்குறிப்பிட்ட மூன்று வழிகளாலும் ஏற்படக்கூடிய பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு என்பன ஒரு சில நாட்களில் அதன் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டனர்.

அத்துடன் தேசிய வருமானத்தில் 9 முதல் 9.[illegible] சதவீதமான தொகை வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையாக வரும் என்று எதிர்பார்ப்பதாகவும், பாதுகாப்புச் செலவினம் 30 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமாகும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் போருக்கு நிதி திரட்டுவதற்காகப் பாதுகாப்பு வரி கலால்வரி என்பன அதிகரிக்கப்பட்டதுடன் தனியார்மயமாக்கலைத் தீவிரப்படுத்தவும் முதலீடற்ற செலவினத்தைப் பத்துச் சதவீதத்தாற் குறைக்கவும் புதிய அபிவிருத்தித்திட்டங்களை ஒத்தி வைக்கவும், மின்சார சபையின் 1.5 பில்லியன் ரூபாய்களைத் திறைசேரியில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

# நவாலி தேவாலய குண்டு வீச்சு அரசு நடத்தும் விசாரணை உன்னிப்பாய் அவதானிக்கப்படும்

## —கொழும்பு அதிமேற்றிராணியார்

நவாலி தேவாலயம் மீது நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சுக் குறித்து விசாரணை நடத்த விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட இருப்பதை வரவேற்கும் அதேவேளை, இந்த விசாரணைகள் எவ்வாறு நடைபெறப் போகிறது என்பது குறித்து நாம் உன்னிப்பாக அவதானித்து வருவோம் என சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு, கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு அதிமேற்றிராணியார் அதி. வண. கலாநிதி நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், யாழ்குடா நாட்டில் உங்கள் அரசினால் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் பெருந்தொகையான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டும், பல நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்தும் உள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதன் உச்சக்கட்ட செயற்பாடாக எமது திருச்சபை தேவாலயம் ஒன்றின் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதால் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பலியாகவும் பல நூற்றுக்கணக்கானவர்கள் காயமடையவும் நேர்ந்தது. இது குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

இந்த விசாரணைகள் தாமதியாது நடத்தப்பட வேண்டும் என்பதுடன், இதில் பாதிப்படைந்தவர்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்கவேண்டும் என்றார்.

# அதிகாரப் பரவலாக்கலை கைவிடுமாறு 27 அமைப்புக்கள் வலியுறுத்தல்

அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனைகள் சமஸ்டி அரசை உருவாக்கும். இதனால் எல்லைகளில் ஓயாத சச்சரவு ஏற்படும். 30 சதவீத நிலப்பரப்பில் 6 சதவீத மக்கள் தொகை வாழும் நிலை ஏற்படும். இவர்களிடம் 60 சதவீத கடற் கரையோரம் ஒப்படைக்கப்படும். பிராந்தியங்களுக்கு வழங்கப்படும் காவல் துறை அதிகாரம் சுதந்திர பிராந்தியக் காவல்துறையை உருவாக்குவதை தடுக்கமுடியாமல் செய்துவிடும். அத்துடன் தமிழர்கள் இந்தியாவில் இருந்து புலம்பெயர்வர். ஆயுதங்களும் இறக்குமதியாகும். ஆகவே இத்திட்டத்தை கைவிடவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், பௌத்த பிரம்மஜான சங்கம், தேசப்பிரமி பிக்கு பெரமுனை, சிங்களச் சட்டத்தரணிகள் சங்கம் உட்பட 27 அமைப்புக்கள் சிறீலங்கா சனாதிபதியை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

# மட்டு. தொலைத் தொடர்பு நிறுவனத்தைக் குண்டு வைத்துத் தகர்க்க முயற்சி

மட்டக்களப்பு நகரிலுள்ள தொலைத் தொடர்பு நிறுவனக் கட்டிடத்தைக் குண்டு வைத்துத் தகர்க்க முயற்சியெடுக்கப்பட்டதாகச் சிறீலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொள்கலன் ஒன்றுக்குள் நேரம் கணித்து வைக்கப்பட்ட இக்குண்டைக் குறித்த நேரத்திற்கு இரண்டு நிமிடம் முன்னதாகப் படையினர் செயலிழக்க வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ் குடாநாடு மீது எந்நேரத்திலும் அடுத்தகட்ட பெரும் போர் ஆரம்பமாகலாம்

யாழ் குடாநாடு மீதான அடுத்தகட்ட பெரும்போரை எந்நேரத்திலும் ஆரம்பிப்பதற்கு முழு அளவு ஆயத்தங்களை சிறீலங்கா பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது.

## சிறீலங்கா நவீன ஆயுதங்களை இறக்கியது.

மூன்று கட்டங்களில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

முதலாவது, வெளிநாடுகளில் இருந்து தேவையான உதவிகள் கிட்டும் எனக்கூறிய சிறீலங்கா, அது சாத்தியப்படாத நிலையில் பெருந்தொகையான பணத்தைத் தானே செலவிட்டு, ஆயுதங்களைக் கொள்வனவு செய்து, கட்டங்கட்டமாக இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது. இதற்கென சிறீலங்காவின் பொது வரிவிதிப்புக்கள் உயர்த்தப்பட்டு மக்களின் வரிப்பணம் ஆயுதத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. புடவைக்குக் கூட வரி உயர்த்தப்பட்டு, இத்தகைய வரிஉயர்வுகள் மூலம் மேலதிகமாக இருநூற்று முப்பத்தைந்து கோடி ரூபா திரட்டப்படவுள்ளதாகத் தெரிகின்றது. அதேவேளை வெளிநாடுகளில் உள்ள சிறீலங்காத் தூதரகங்கள் களியாட்டநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், நிதி சேகரிப்புக்கள் மூலமும் பணத்தைத் திரட்டி அனுப்பும் என சிறீலங்காத் திட்டங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளையில் சிறீலங்கா தனது பாதுகாப்புச் செலவீனத்திற்கான தொகையை, மேலும் 430 கோடியால் அதிகரித்துள்ளதாகவும் தெரிகிறது. இப்பணங்களையும், அபிவிருத்தி புனர்வாழ்வு- புனர்நிர்மாண உதவிக்கென வெளிநாடுகள் கொடுத்த திட்ட உதவிகளையும் தந்திரமானமுறையில் நவீன ஆயுதக் கொள்வனவிற்காகச் சிறீலங்கா திருப்பியுள்ளதென கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா, ஏவுகணைக்கு நிலைநிற்கக்கூடிய நவீன தொழில் நுட்பங்கள் அமைந்த விமானங்களைக் கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை காட்டி வருகிறது. இதேவேளை, இந்தியா மறைமுக ஆயுத, தத்துவார்த்த ஆதரவுகளைச் சிறீலங்காவுக்கு வழங்குகிறது என இந்திய அரசியல் வாதிகள் குறைகூறியுள்ளனர்.

அத்துடன், பாகிஸ்தானிலிருந்து துப்பாக்கி ரவைகளும், சிறுரக இராணுவ ஆயுதங்களும், வை-8 விமானம் ஒன்றும் சிறீலங்காவினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாடுகளின் இராணுவ தொழில்நுட்ப ஆலோசகர்களைக் கூலிக்கு அமர்த்துவதிலும் சிறீலங்கா ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

*புடவைக்குக் கூட வரி உயர்த்தப்பட்டு, இத்தகைய வரிஉயர்வுகள் மூலம் மேலதிகமாக இருநூற்று முப்பத்தைந்து கோடி ரூபா திரட்டப்படவுள்ளதாகத் தெரிகின்றது. அதேவேளை வெளிநாடுகளில் உள்ள சிறீலங்காத் தூதரகங்கள் களியாட்ட நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், நிதி சேகரிப்புக்கள் மூலமும் பணத்தைத் திரட்டி அனுப்பும் என சிறீலங்காத் திட்டங்கள் தெரிவிக்கின்றன.*

இரண்டாவது கட்டத்தில், தான் தொடங்க இருக்கும் தமிழீழ மக்கள் மீதான போரில் தமிழினப் படுகொலையைத் தான் செய்யும்பொழுது சர்வதேச கருத்து எதிராகத் திசை திரும்புவதைத் தடுக்கும் நோக்கில் சந்திரிகா, தீர்வுத் திட்ட யோசனைகளை வெளியிட்டு தாம் அரசியல் தீர்விலும் அக்கறை காட்டுவதாகவும், அதற்கு எதிராக உள்ள விடுதலைப் புலிகளையே தாம் அழித்தொழிக்க, போர் நடாத்திக் கொண்டிருப்பதாகவும் வெளியுலகிற்கு நம்பிக்கை ஏற்பட வைப்பதற்கான முயற்சியைத் தொடங்கியுள்ளார். தீர்வு யோசனைகள் பலனுள்ளவை என்பதற்குச் சாட்சிகளாக இத்தீர்வுத்திட்ட யோசனைகளைக் குறித்து சாதகமான கருத்துக்களைக் கூறும் முன்னாள் கூட்டணித் தலைவர்களையும், தமிழ்க் குழுக்களையும் சிறீலங்கா வெளியுலகிற்கு வெளிப்படுத்தி வருகிறது. சிறீலங்கா பல்லினமக்கள் தொகுதி. எனவே பல்லின சமுதாயத்திற்கான தீர்வு தான் சாத்தியமானது என வெளியுலகிற்கு நிறுவுவதன் மூலம் சிறீலங்கா தனது அதிகாரப் பரவலாக்கல் தீர்வை தமிழீழ மக்கள் மீது திணிப்பதை சர்வதேச நெருக்குதல்கள் மூலம் சுலபமாக்கலாம் என சிறீலங்கா திட்டமிட்டு செயற்படுகிறது. தமிழ் மக்களுக்குக் கூடுதல் அதிகாரப் பரவலாக்கலை வழங்குவதைத் தடுக்கும் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டாலே அரசியல் தீர்வு சாத்தியம் எனக்கூறி, தான் தொடங்க இருக்கும் அடுத்தகட்ட தமிழின அழிப்பை நியாயப்படுத்தத் திட்டமிடுகிறது.

மூன்றாவது கட்டமாக, தமிழீழப் பகுதிகளுக்கு உணவு விநியோகத்தை முற்றாக சீர்குலைத்து தொடங்க இருக்கும் தாக்குதல் நீடிக்குமானால் மக்கள் பட்டினிச் சாவினை அடையச் செய்யும் முயற்சிகளில் சிறீலங்கா ஈடுபட்டுள்ளது.

*சிறீலங்கா பல்லினமக்கள் தொகுதி. எனவே பல்லின சமுதாயத்திற்கான தீர்வு தான் சாத்தியமானது என வெளியுலகிற்கு நிறுவுவதன் மூலம் சிறீலங்கா தனது அதிகாரப் பரவலாக்கல் தீர்வை தமிழீழ மக்கள் மீது திணிப்பதை சர்வதேச நெருக்குதல்கள் மூலம் சுலபமாக்கலாம் என சிறீலங்கா திட்டமிட்டு செயற்படுகிறது. தமிழ் மக்களுக்குக்கூடுதல் அதிகாரப் பரவலாக்கலை வழங்குவதைத் தடுக்கும் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டாலே அரசியல் தீர்வு சாத்தியம் எனக்கூறி, தான் தொடங்க இருக்கும் அடுத்தகட்ட தமிழின அழிப்பை நியாயப்படுத்தத் திட்டமிடுகிறது.*

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடக்கின்றனர். அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டுமென்ற கோசத்தை சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் ஊக்கப்படுத்துகின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர், தமிழீழ மக்களுக்கு சிறீலங்கா ஏற்படுத்தும் படுகொலைகளையும் போர்க் குற்றச் செயல்களையும் உலகுக்கு அம்பலப்படுத்தியமையே இந்த கொந்தளிப்புக்கான காரணம். சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர், செஞ்சிலுவைச் சங்கம் எந்த செய்திகளையும் முதலில் சிறீலங்கா அரசுக்கு அறிவித்த பின்னரே வெளிநாடுகளுக்கு அறிவிக்க வேண்டுமென நிபந்தனை விதித்துள்ளார்.

இவ்விதம் தமிழீழ மக்களின் உண்மைச் செய்திகள் வெளியுலகிற்கு வெளிவராமல் தடுப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் சிறீலங்கா செய்துவருகிறது. அதே வேளை இலண்டனை மையமாக வைத்து எப். எம் அலைவரிசையில் ஆங்கிலச் செய்தியினை வெளிநாடுகளுக்கு ஒலிபரப்பி இதுதான் உண்மை என்ற மாயைத் தோற்றத்தை ஏற்படுத்த சிறீலங்கா ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளது.

இவ்விதம் இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பிரச்சார ரீதியாகவும் மூன்று கட்டங்களில் யாழ். குடாநாடு மீதான அடுத்த தாக்குதலை ஆரம்பிக்க சிறீலங்கா சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துள்ளது.

ஆயினும் சிறீலங்கா இராணுவம் முன்னோக்கி பாய்ச்சலில் விடுதலைப் புலிகளிடம் செம்மையாக வாங்கிக்கட்டியமையால் ஏற்பட்ட இழப்புக்களை கண்ட சிறீலங்கா இராணுவத்தின் களப் பிரிவுகள் அடுத்த கட்ட தாக்குதலை தொடங்குவதற்கான மனோநிலை வலிமை இழந்து காணப்படுகின்றன. "தற்பொழுது தாக்குதல் நடாத்தினால் விடுதலைப் புலிகளிடம் முழுத் தோல்வியை அடைய வேண்டிய நிலையே மேலோங்கி நிற்கிறது" எனக் கருதுவதாக சிறீலங்காவின் இராணுவ அதிகாரிகள் சிலர் கூறியுள்ளனர்.

இது ஒரு புறமிருக்க சிறீலங்கா இராணுவத்திடையில் அதிகரித்துவரும் உட்பூசல்களால் சிறீலங்கா அரசு குடாநாடு மீதான போரைத் தொடங்க முடியாத இக்கட்டான நிலையில் உள்ளதாக தெரியவருகிறது.

சிறீலங்கா இராணுவத்துள் சிறீலங்கா பாதுகாப்பு பிரதியமைச்சர் ரத்வத்தவுக்கும் சிறீலங்கா இராணுவத் தளபதி செனவிரத்தினாவுக்கும் இடையே போர் நடத்துவது குறித்து பலத்த கருத்து வேறுபாடு தோன்றியுள்ளதாக 'ஏசியா வீக்' தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் சிறீலங்கா இராணுவத்தில் சுதந்திரக்கட்சி சார்பான அரசியல் பதவியுயர்வுகள் வழங்கப்படுவதாகவும் சேவை புறக்கணிக்கப்படுவதாகவும் இதனால் குழப்பநிலை தோன்றியுள்ளதாகவும் ஐ. தே. கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் ரத்வத்த, சிறீலங்காப் பாராளுமன்றத்தில் பேசுகையில் சிறீலங்கா இராணுவத்தில் சிறுதொகையினர் தமது திட்டங்களை எதிர்ப்பதாகச் சாடியுள்ளார்.

அத்துடன் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நேரடியாகவே முன்னோக்கிப் பாய்ச்சல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவம் தாக்குதலில் ஈடுபட்ட பகுதிகளை கைவிட்டு முகாம்களுக்கு திரும்பிவிட்டனர் எனக் கூறியமை சிறீலங்காவின் பொய்ப்பிரச்சாரத்தை அம்பலமாக்கியுள்ளது. அத்துடன் சிறீலங்கா, சிங்கள மக்களிடையில் விடுதலைப் புலிகளை சிறீலங்கா இராணுவத்தால் வெற்றி கொள்ள முடியாது என்ற உண்மையை மீண்டும் உணர்த்தியுள்ளது.

இதனால் சிறீலங்கா அரசு குடாநாடு மீதான போரை மீண்டும் தொடங்க் நாள் குறிக்க முடியாது தடுமாறுவதாகவும் ஆயினும் பாரிய தாக்குதல் ஒன்றில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தை கடற்படை, விமான, டாங்கி உதவியுடன் இறக்கி எவ்வாறாவது குடாநாட்டை தாக்கவேண்டும் என்ற எண்ணம் தொடர்வதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போரை நிறுத்தி மக்கள் பிரச்சினைகளை தீர்த்தால் சமாதானம்

## போரால் மக்களை அழிக்கமுனைந்தால்- தனியரசுக்கான போராட்டம்

"நாம் ஒரு பாரிய போரைச் சந்தித்திருந்த போதிலும் சமாதானப் பாதையைக் கைவிடவில்லை. சமாதானப் பேச்சக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகளைக் கைவிடவில்லை. நாம் போருக்கும் தயார்! சமாதானத்திற்கும் தயார்! சந்திரிகா அரசு சமாதானக் கதவுகளை இழுத்து மூடிவிட்டது போன்று நாம் சமாதானக் கதவுகளை இழுத்து மூடிவிடவில்லை.

போரை நிறுத்திச் சமாதானச் சூழலை ஏற்படுத்தி எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுற்பட்டால் நாம் மீண்டும் பேச்சுக்களிற் பங்குகொள்ளத் தயார்.

ஆனாற் போரைத் தீவிரப்படுத்தித் தமிழினத்தைக் கொன்றழிக்க முயலுமாயின் நாம் சமாதானக் கதவுகளை மூடிவிட்டுத் தனியரசை நிர்மாணிப்பதற்குப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எனவே சமாதானப் பாதையில் சென்று தமிழர் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதா அல்லது போரின் வழியிற் சென்று நாட்டைப் பிரிப்பதா என்ற முக்கிய முடிவை எடுப்பது சந்திரிகா அரசைப் பொறுத்தது'

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் விடுதலைப் புலிகளின் இன்றைய நிலையினை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். அவருடைய கருத்துக்களின்

### காலநிதி அன்ரன் பாலசிங்கம்

தொகுப்பு வருமாறு:-

'முழு இலங்கைத் தீவுக்கும் பிரதேச ரீதியாக அதிகாரப் பரவலாக்கம் வழங்கும் யோசனைகளைக் கொண்ட உத்தேசத் தீர்வுத் திட்டம் ஒன்றைச் சந்திரிகா அரசு அறிவித்துள்ளது. இந்த யோசனைகள் தமிழர் தாயகத்தில் வசிக்கும் தமிழ் மக்களுக்கோ அன்றி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகளுக்கோ முன்வைக்கப்படவில்லை.

இந்த நிலையில் இவற்றின் தகைமை பற்றியோ சாதக பாதக அம்சங்கள் பற்றியோ நாம் கருத்து தெரிவிப்பதில் அர்த்தமில்லை. ஆயினம் இந்த அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் இப்போது ஏன் அறிவிக்கப்பட்டது! இதுபற்றி ஏன் பிரமாதமான முறையில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது! இந்த அறிவிப்பின் அந்தரங்க நோக்கங்கள் என்ன! என்பது பற்றி எமது மக்களுக்கு எடுத்து விளக்குவது முக்கியம்.

முதலாவது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் சமாதான வழிமூலமாக சமரசப் பேச்சுக்கள் வாயிலாக ஒரு அரசியல் தீர்வைக் காணும் நோக்கத்துடன் இந்த யோசனைகள் அறிவிக்கப்படவில்லை. ஏனென்றால் இந்த யோசனைகளைப் பகிரங்கப்படுத்திய அதேசமயம் தமிழருக்கு எதிரான போரையும் பிரகடனம் செய்துள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கம் ஒழிக்கப்படும்வரை போர் தொடர்ந்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே சந்திரிகா அரசின் இந்த யோசனைகள் ஒரு நிலையான சமாதானத்திற்கோ நிரந்தரமான அரசியரல் தீர்வுக்கொ வழிகோலப் போவதில்லை. மாறாக ஒரு நீண்டகால போரிற்கே வழிவகுக்கின்றது.

இந்த அரசியல் யோசனைகள் என்பது இராணுவத் தீர்வை நியாயப்படுத்துவதற்கு போடப்பட்ட ஒரு ஏமாற்று முகமூடியே அன்றி வேறெதுவுமில்லை.

சமாதான வழிகருதி தமிழரது தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் உன்னத நோக்கு அரசிற்கு இருந்திருக்குமானால் புலிகளுடன் நிகழ்ந்த சமாதானப் பேச்சக்களின் போது தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து ஓர் அரசியற் தீர்வுத் திட்டத்தையும் புலிகளின் பரிசீலனைக்கு முன்வைத்திருந்திருக்கலாம். ஆனால் இராணுவ நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து பேச்சவார்த்தைகள் முறிவடைவதற்கான புறச்சூழ்நிலைகளை உருவாக்கியது மட்டுமன்றி அன்றும் இன்றும் இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

இராணுவ ரீதியாக புலிகளை அழித்துவிட்டால், தான் விரும்பியவாறு எதாவதொரு அரை குறையான தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்கள் மீது திணித்துவிடலாம் என சந்திரிகா அரசு எண்ணுகிறது போலும்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு என்றும் விடுதலைப் புலிகளுக்கு இராணுவத் தீர்வு என்றும் ஒரு கேலிக்கூத்தான அணுகுமுறையை அரசு கடைப்பிடிக்கிறது. அதிகாரப் பரவலாக்கம் என்ற மாயையைக் காட்டி தமிழ் மக்களுக்கு ஒரு போலியான நம்பிக்கையைக் கொடுத்து புலிகளையும் மக்களையும் பிளவுபடுத்திவிடலாம் என அரசு கனவு காண்கிறது.

அதுமட்டுமன்றி இந்த யோசனைகளில் உள்ள சில முக்கிய அம்சங்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் திருத்தப்பட்டு மாற்றப்பட்டு நீக்கபடலாம் எனவும் சொல்கிறார்கள்.

தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வைத் தீர்மானிப்பது தமிழ் மக்களாகவே இருக்க வேண்டும்.

இராணுவ பலாத்காரம் மூலமாக அரசியல் காணவிளையும் இந்த விபரீதமான அணுகுமுறையை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இந்த அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் எதர்காலத்தில் எவ்வித மாற்றத்தைக் காணும் எவ்வித வடிவத்தை எடுக்கும் என்ற தீர்க்க தரிசனப் பார்வை எதுவுமின்றி கொழும்பில் உள்ள தமிழ்க் குழக்கள் எடுத்த எடுப்பிலேயே இந்த யோசனைகளை வரவேற்றிருக்கின்றன. இது பற்றி நாமோ எம் மக்களோ ஆச்சரியப்படவில்லை.

தமிழ் மக்களால் ஒதுக்கப்பட்டு மோசடித் தேர்தல் மூலம் பாராளுமன்றத்தில் நுழைந்து கொண்ட இந்தக் குழக்கள் தமிழ் மக்களின் தேசிய நலனில் என்றுமே அக்கறை காட்டவில்லை.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு அரசியல் பாலைவனத்தில் அலைந்து திரிந்த சிலர் இப்பொழுது சந்திரகா அரசு குடையின் கீழ் குளிர்காய்ந்து வருகின்றார்கள்.

இரசியல் விவேகம் பற்றியும் விடுதலைப் புலிகளுக்குப் போதிக்கிறார்கள். இவர்களது அரசியல் ஞானம் பற்றி எமது மக்களுக்கு நன்கு தெரியும். அதிகாரப் பரவலாக்கல் என்ற ஆசைவலையில் சிக்கி மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களுக்கு இவர்கள் துரோகமிழைக்கவே முனைகிறார்கள். இவர்களை நாம் மன்னித்தாலும் எமது இனத்தின் வரலாறு மன்னிக்கப் போவதில்லை'

# சொத்து சுகத்தைவிட சுதந்திரமும் மண்விடுதலையும் முக்கியமானது!

## தமிழீழ பாதுகாப்பு நிதி வழங்கிய ஜெகதீசன்

எமது சுதந்திர வாழ்வை அழிக்க எதிரி கங்கணம் கட்டி நிற்கின்றான். இதனால் இங்கு வாழ்வதற்காக போராட்டம் நடக்கின்றது. இதற்குப் பணம் தேவைப்படுகிறது. சொத்துச் சுகத்தைவிட மண் விடுதலை, அதனூடாகச் சுதந்திரம் அவசியமானது, இந்த நிலையில் என்னால் இயன்ற அன்பளிப்பைத் தற்பொழுது வழங்கியுள்ளேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழப் பாதுகாப்பு நிதிக்கு நிதியுதவி வழங்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டனர். இதற்கு அமைவாகத் தாமாக முன்வந்து பணம் அன்பளிப்புச் செய்த யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த முருகேசு ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

சிறீலங்கா அரசின் துண்டுதலினாற் சிங்கள பௌத்த சமயத் துறவிகள் உட்படப் பலரும் எமது வாழ்வை அழிப்பதற்காக நிதி வழங்கி வருகின்றனர். இந்நிலையில் நாம் வாழ்வதற்காகப் போராட வேண்டியுள்ளது. கீரிமலையில் அமைந்துள்ள எனது வீடு இராணுவத்தினராலும், மாற்று இயக்கத்தவர்களாலும் 1989ஆம் ஆண்டு கொள்ளையடிக்கப்பட்டது. இதன் பின்னர் வீடு தகர்க்கப்பட்டது. இதன்போது நான் பெருமளவு பொருண்மிய இழப்பைச் சந்தித்தேன். இதைப் போராட்டத்தின் மூலம் தான் தடுக்க முடியுமென நான் நம்புகிறேன். இந் நிலையிற் புலிகள், போராட்டத்திற்கு நிதி தேவைப்படுவதாகப் பகிரங்க அறிவிப்பை விடுத்திருந்தனர்.

இதைப் பார்த்ததும் எனது தற்போதைய இயலுமைக்கேற்ப பத்தாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்தேன். தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளேன் என்றார்.

இன்று விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்றால் எமது நிலை எப்படியிருக்கும் எனச் சிந்தித்துப் பார்க்கும் போது போராட்டத்தின் அவசியத் தன்மையை என்னாற் புரிந்து கொள்ள முடிந்தது. இந்நிலையில் எனது காப்பு, மோதிரம், பென்ரன் என்பனவற்றை விற்றுப் பத்தாயிரத்து ஐம்பது ரூபாவைத் தமிழீழப் பாதுகாப்பு நிதியாகச் செலுத்தினேன்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக நுண்கலைப் பீடத்திற் கல்வி பயிலும் மாணவி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது இரு சகோதரிகள் எனக்கு அன்பளிப்புச் செய்திருந்த எனது காப்பு, மோதிரம், பென்ரன் ஆகியவற்றை விற்று இந்த அன்பளிப்பைச் செலுத்தினேன். தொல்புரத்திற் கடந்த காலத்திற் சிறிலங்காப் படைகளின் எறிகணைத் தாக்குதலினாலும், விமானங்களின் கொடூரங்களினாலும் எமது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி தற்பொழுது நான் அன்பளிப்புச் செய்த தொகையின் ஐம்பது மடங்கு. இந்நிலை மீண்டும் எமக்கு ஏற்படக்கூடாது. எமது உறவினர்களிற்கும் ஏற்படக்கூடாது எனக் கருதும் பொழுது மண்மீட்பின் முக்கியத்துவத்தை உணர முடிகிறது. இந்நிலையிலேயே போராட்டத்திற்குப் பணத் தேவை பற்றியும் புரிந்துகொண்டு செயற்பட்டேன் என்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# 'முன்னோக்கிப் பாய்தல்' மீது புலிப்பாய்ச்சல்

முன்னைய அரசைப் போலவே தற்போதைய அரசும் குடாநாட்டைக் கைப்பற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகின்றது. முன்னைய அரசின் திட்டம்: குடாநாட்டைச் சூழ ஒரு இராணுவ முற்றுகையை இட்டு - புலிகளின் நகர்திறனைச் சிதைத்து - பின்னர் புலிகளை அழிப்பது ஆகும். இருந்தபோதிலும், இந்த முற்றுகை முயற்சி புலிகள் இயக்கத்தால் முறியடிக்கப்பட்டதால், தற்போதைய அரசு வேறொரு திட்டத்தைத் தயாரித்து வைத்திருக்கின்றது. அதாவது, யாழ்நகர் உட்பட, குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகர்களைக் கைப்பற்றி, குடாநாட்டில் இருந்து புலிகளை அடித்து விரட்டுவதுடன் - புலிகளுடனான போரைப் பயன்படுத்தி, கணிசமான தமிழ் மக்களைக் கொன்று - இனப்படுகொலை செய்து - தமிழ் மக்களின் போராட்ட உறுதியையும் நசுக்கிவிடுவதே, சந்திரிகா-ரத்வத்த அரசின் புதிய திட்டமாகும்.


இந்தப் புதிய திட்டத்தின் முதற்கட்டம்தான், சிங்களப் படைகள் நடாத்திய முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கை ஆகும். சண்டிலிப்பாய் - சங்கானை - சித்தன்கேணி - சங்கரத்தை - சுழிபுரம் - பொன்னாலை - மூளாய் - வட்டுக்கோட்டைப் பகுதிகளைக் கைப்பற்றிவிட்டு, பின்னர், சண்டிலிப்பாய் ஊடாகவும் வட்டுக்கோட்டைப் பகுதியில் இருந்து அராலிக் கடற்கரை வழியாகவும் - இரண்டு முனைகளூடாக - யாழ். நகரத்தை நோக்கிப் படைகளை நகர்த்துவதே 'முன்னோக்கிப்பாய்தல்' நடவடிக்கையின் இறுதி இலக்காக இருந்தது. கொப்பேகடுவ தயாரித்து நடைமுறைப்படுத்த விரும்பிய திட்டமும் கிட்டத்தட்ட இதை ஒத்தது என்பது கவனிக்கத்தக்கது.

கொப்பேகடுவவும் அவரது திட்டமும் அராலிக் கண்ணியில் சிதறுண்டது போல, சந்திரிகா-ரத்வத்தவின் திட்டம் 'புலிப்பாய்ச்சலுடன்' புழுதியில் வீழ்ந்துவிட்டது. அன்று - குடாநாடு எதிர்கொள்ள இருந்த ஒரு அபாயத்தை அராலிக் கண்ணி தற்காலிகமாகத் தடுத்தது.

> கொப்பேகடுவவும் அவரது திட்டமும் அராலிக் கண்ணியில் சிதறுண்டது போல, சந்திரிகா-ரத்வத்தவின் திட்டம் 'புலிப்பாய்ச்சலுடன்" புழுதியில் வீழ்ந்துவிட்டது. அன்று - குடாநாடு எதிர்கொள்ள இருந்த ஓர் அபாயத்தை அராலிக் கண்ணி தற்காலிகமாகத் தடுத்தது. அதேபோல, இன்று - குடாநாடு சந்திக்க இருந்த ஒரு பேராபத்தை 'புலிப்பாய்ச்சல்" தற்காலிகமாகத் தடுத்துள்ளது.

அதேபோல, இன்று - குடாநாடு சந்திக்க இருந்த ஒரு பேராபத்தை 'புலிப்பாய்ச்சல்' தற்காலிகமாகத் தடுத்துள்ளது. இந்த, தற்காலிகப் பாதுகாப்புக்களை நிரந்தரப் பாதுகாப்பாக மாற்ற வேண்டிய கடமை எமது இளைஞர் - யுவதிகளின் கைகளில்தான் தங்கியுள்ளது. அதாவது, புலிகள் இயக்கத்தின் ஆட்தொகையை அதிகரிப்பதன்மூலம் இந்த நிரந்தரப் பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முடியும்.

'முன்னோக்கிப் பாய்தலில்' அரசுப்படைகள் கடைப்பிடித்த நகர்வு யுக்தியை "ஆங்கில எழுத்தான 'யூ'வடிவிலான தந்திரோபாயம்" என, சிங்களத் தளபதிகள் வர்ணித்துள்ளனர். அளவெட்டிப் பகுதியில் இருந்து சண்டிலிப்பாய் சீரணிச் சந்தியை நோக்கிய ஒரு நகர்வையும், மாதகலில் இருந்து கடற்கரை ஓரமாக மூளாய், பொன்னாலை வழியாக வட்டுக்கோட்டை வரை அடுத்த நகர்வையும் சிங்களப் படைகள் செய்தன. இந்த இருமுனை நகர்வையும் இணைத்து - ஒரு வழங்கல் பாதையை ஏற்படுத்தவும் - அதன்மூலம் படையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் என, சண்டிலிப்பாயிருந்து வட்டுக்கோட்டை வரையுள்ள சங்கானை - சித்தன்கேணி - சங்கரத்தை ஆகிய இடங்களையும் சிங்களப் படைகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தன.



ஆயினும், இந்த 'யூ' வடிவ இராணுவ நிலைகளின் ஒரு பகுதியான சண்டிலிப்பாய் - சங்கானை - அளவெட்டிப் பகுதிகள் மீது, 14-07-1995 அன்று அதிகாலை, 'யூ' இனை நடுவில் பிளந்ததுபோல - நடந்த புலிப்பாய்ச்சலுடன், சிங்களப் படைகளின் படைநகர்வு வடிவம் சிதைவடைந்துவிட்டது.

'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையின் வெற்றி பற்றி, சிங்கள அரசு செய்த மிகைப்படுத்தப்பட்ட பிரச்சாரத்தால் ஆகர்சிக்கப்பட்ட சிங்கள மக்கள், தமது இனம் ஒரு வரலாற்று வெற்றியைப் பெற்றுவிட்டது போல எண்ணி மகிழ்ந்தனர். சூனியத்தில் பிறந்த இந்த மகிழ்ச்சி நெருப்பை, சிங்களச் செய்தித்தாள்கள் நெய்வார்த்து வளர்த்தன. 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை என்பது - 'புலிகள் தலையில் விழுந்த ஒரு குட்டு' என, 'டெய்லி நியூஸ்' செய்தித்தாள் ஆசிரியர் தலையங்கம் எழுதி மகிழ்ந்தது. தாண்டிக்குளத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் 'ஐஸ்கிறீம்' விநியோகித்து, தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சிங்கள தேசத்தின் மற்றைய இடங்களில் வெடிகொளுத்தி - இனிப்புப் பண்டங்களை வழங்கி - சிங்கள இனம் வெற்றியைக் கொண்டாடியது. கோட்டை இராச்சியத்தின் படைகள், யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றியது போன்ற உணர்வைச் சிங்கள மக்கள் பெற்றிருந்தனர் போலும்! பலாலிப் படைத்தளத்தைச் சேர்ந்த படையினரைத் தவிர மிகுதி அனைத்துச் சிங்களச் சிப்பாய்க ளும், தங்களைத் துட்டகைமுனுவின் மறுபிறப்புக்களாகவே

தொடர்ச்சி மறுபக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முன்னோக்கிய பாய்ச்சல் மீது புலிப்பாய்ச்சல்...

எண்ணி மகிழ்ந்து இருந்தனர். ஆனால், 'புலிப்பாய்ச்சலின்' பின்னர் களநிலைமை வேறுவிதமாக மாறிவிட்டது என்ற உண்மையைச் சிங்கள இனம் அறிந்த பின்னர் என்ன செய்தனரோ தெரியவில்லை!




'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கைக்குச் சந்திரிகாவின் அரசியல் தலைமையும், ரத்வத்த வின் படைத் தலைமையும் சேர்ந்து செய்த முன்னேற்பாடுகள் பிரமாண்டமானவை. இப்பாரிய முன்னேற்பாடுகளைக் கண்டு திருப்தியுற்ற ரத்வத்த சொன்னார், "புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை எமது படை கள் தொடங்கும்போது நாடே வியப்புறும்" என்று. இந்தப் படையெடுப்பிற்கான முன்னேற் பாடுகளில் பெரும் நம்பிக்கை கொண்ட சந்திரிகா அம்மையார் சொன்னார், "இது சமாதானத்திற் கான போர்!" போரின் வெற்றியில் நம்பிக்கை வைத்து இவ்வாறு போருக்கு வியாக்கியானம் கொடு த்தார். சந்திரிகா அம்மையாரும் ரத்வத்தவும் நம்பியதுபோலவே படையெடுப்பிற்கான ஏற்பாடுக ளும் பாரிய அளவில் நடந்தன.

வீச்சுக்களில் ஈடுபட்டன. இதனால் இந்தக் குண்டுவீச்சு விமானங்கள் போர்முனைப் பகுதியில் குண்டு களை வீசுவதை விட, அதற்கு அப்பால் மக்கள் தஞ்சமடைந்த பகுதிகளிலேயே குண்டுவீச்சு க்களை நடாத்தின. அதன் கார ணமாக என்றுமில்லாத அளவு க்கு, விமானக் குண்டுவீச்சுக்க ளால் அப்பாவி மக்கள் படு கொலை செய்யப்பட்டனர். நவாலி தேவாலயத்தின்மீது நடந்த விமானத் தாக்குதலில் 120இற்கு மேற்பட்ட மக்கள் பலியாகியுள் ளமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, தரையில் நகர்ந்த படையினருக்கு உதவியாக அவர்களுக்கு மேல் பறந்து கொண்டிருந்த உலங்குவானூ ர்திகள், நகர்வின் திசைகளையும் இடங்களையும் மற்றும் புலி களின் நடமாட்டங்களையும் அவதானித்ததுடன், காயமடைந்த படையினரை ஏற்றும் பணியிலும் ஈடுபட்டிருந்தன.




'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை தொடங்க முன்னர் 'எடித்தாரா' கப்பல் ஊடாகவும், தரையிறக்கு கலங்கள் ஊடாகவும், 2400 தொன் எடையுடைய வெடிப்பொருட்கள் - பிரதானமாக எறிகணை வகைகள் - காங்கேசன்துறை துறைமுகத்திற்கூடாக இறக்கப்பட்டிருந்தன (ஐலண்ட்- 20.07.95). அதேவேளை 25 இற்கும் மேற்பட்ட ரஷ்யத் தயாரிப்பான டாங்கிகளும் - கவச வாகனங்களும் மேலதிகமாகப் பலாலிக்குக் கடல்வழியாக அனுப்பி வைக்கப்பட்டன. இத்துடன் சிங்கள வான்படையும் விமான எதிர்ப்பு ஆயுதங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய ரஷ்யத் தயாரிப்பு விமானங்களை வாங்கி வைத்திருந்தது.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது இரண்டு உலங்குவானூர்திகள் தாக்கப்பட்டிருந்ததாக அரசப்படைகள் ஏற்றுக்கொண்டுள்ளன. அதில் ஒன்று பலத்த சேதத்திற்கு உள்ளாகி - பறக்க முடியாது - மாதகலில் அவசர தரையிறக்கத்துக்கு முயன்றபோது விழுந்து நொருங்கியதாக, கொழும்புச் செய்தித்தாளொன்று (சண்டே ரைம்ஸ்- 16-07-1995) தெரிவித்தது.

ஏறக்குறைய பத்தாயிரம் விசேட பயிற்சி பெற்ற படையினர் நன்கு ஆயுத மயப்படுத்தப்பட்ட நிலையில் - இந்த இராணுவ நடவடிக்கையில் பங்குகொண்டனர். பாரிய இழப்புக்கள் எதையும் அவர்கள் சந்திக்காததால், யாழ் நகர் நோக்கிய அடுத்த நகர்விற்காகச் சிங்களப் படைகள் ஆவலுடன் காத்திருந்தன. 'படை நகர்வு சுலபமாக அமைந்துவிட்டது என்றும் யாழ். நகரிலிருந்து 7 கிலோமீற்றர் தொலைவிலேயே

> இராணுவ நடவடிக்கை நடைபெற்ற பகுதிக்கு அப்பாலும் - எதுவித இராணுவ நோக்கமும் இல்லாமல் - சிங்களப் படைகள் எறிகணை வீச்சில் ஈடுபட்டன. "புலிகளிடமிருந்து எதிர்ப்புக்க ளைக் காணவில்லை" என்று அரசே அறிக்கைவிட்டது. அப்படியாயின் ஏன் அந்த எறிகணை மழையை அரசுப் படைகள் பொழிந்தன? இங்கே தான் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவருகின்றது. அதாவது.....' முன்னோக்கிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் இலக்குகளில், தமிழ் மக்களின் அழிவும்-இடம்பெயர்வும் அடங்கியிருந்தன என்பதே அதுவாகும்.


## முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கை

09.07.1995 ஞாயிற்றுக்கிழமை, அளவெட்டிப் பகுதிக்கூடாகவும், மாதகல் பகுதிக்கூடாகவும் சிங்க ளப் படைகள் களத்தைத் திறந்தன. முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு பெருந்தொகையில் - பொதுமக்களது இடங்களை நோக்கி - சிங்களப் படைகள் எறிகணை வீச்சுக்களை நடாத்தின. மக்கள் இடம்பெயர்ந்து செல்வதற்குரிய அவகாசத்தையோ அல்லது இன்ன இடத்தால் இடம்பெயர்ந்து செல்லலாம் என்று ஒரு பிரதேசத்தையோ ஒதுக்காது, அனைத்துத் திசைகளிலும் - அப்பகுதியின் அனைத்துக் குக்கிராமங்கள் மீதும் - எறிகணைகளை மழையாகப் பொழி ந்தனர். இதனால், அவலமான ஒரு அவசர இடப்பெயர்வுக்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். எறி- கணைச் சிதறல்கள்பட்டு இறந்த அல்லது காயமடைந்த தம் உறவுகளைக்கூட அந்தந்த இடத்திலேயே விட்டுச் செல் லும் அளவுக்கு, எறிகணை வீச்சுக்களின் கோரமும் - அவை கொடுத்த அதிர்ச்சியும் மக்களை வெகுவாகப் பாதித்தன. தம் கண்களுக்கு முன்னாலேயே தம் உறவுகளைப் பறிகொடுத்ததுடன் - காயமடைந்த உறவுகளைப் பாதுகாக்கவோ அல்லது அப்புறப்படுத்தவோ முடியாத அவலத்தை மக்கள் அனுபவித்தனர். இராணுவ நடவடிக்கை நடைபெற்ற பகுதிக்கு அப்பாலும் - எது வித இராணுவ நோக்கமும் இல்லாமல் - சிங்களப் படைகள் எறிகணை வீச்சில் ஈடுபட்டன. "புலிகளிடமிருந்து எதிர்ப்புக்களைக் காணவில்லை" என்று அரசே அறிக்கைவிட்டது. அப்படியாயின் ஏன் அந்த எறிகணை மழையை அரசப் படைகள் பொழிந்தன? இங்கே தான் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவருகின்றது. அதாவது- 'முன்னோ க்கிப் பாய்தல்' இராணுவநடவடிக்கையின் இலக்குகளில், தமிழ் மக்களின் அழிவும்-இடம்பெயர்வும் அடங்கியிருந்தன என்பதே அதுவாகும்.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது சிங்கள வான்படை யின் சுப்பசொனிக்கும் - புக்காரா விமானங்களும் - உலங்கு வானூர்திகளும், தரையில் நகர்ந்த படையினருக்கு உதவும் வகையில் தாக்குதல்களில் ஈடுபட்டன. புக்காராவும் - சுப்பசொனிக் விமானமும் 8,000 அடிக்கு மேலே நின்று குண்டு

படைகள் நிற்கின்றன' என்றும், அறிவிப்பு போர் முனையில் இருந்து சென்றபோது, சந்திரிகா அரச பேருவகை அடைந் திருக்க வேண்டும்! இதன் விளைவாக இன்னும் சில நாட்களில் தீர்வுத் திட்டம் பகிரங்கப்படுத்தப்படும் என, நீதி அமைச்சர் பீரிஸ் அறிக்கையும் விடுத்தார். யாழ்ப்பாண த்தைக் கைப்பற்றிவிட்டு, தமிழ் இனத்தின்மீது அரைகுறைத் தீர்வுத் திட்டம் ஒன்றைத் திணிப்பத ற்காக, அரசு காத்திருந்தது.

'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை தொடங்கிய நாளில் இருந்து ஒவ்வொரு நாளும், 'ரூபவாகினி'யும், சிறீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தா பனமும், போர்பற்றிய வர்ணனைகளை வெகு டாம்பீகமாகக் கொடுத்துக்கொண்டே இருந்தன. ஆனால் 14 ஆம் திகதியுடன், இந்த விசேட ஒளி- ஒலிபரப்புக்கள் திடீரென முன்னறிவித்தல்கள் இன்றி நின்று போய்விட்டன. அன்றிலிரு ந்து சிங்கள தேசத்தில் பல வதந்திகள் உலாவத் தொடங்கின. அதை மறுப்பதிலும் போர்க்கள நிலைமைகளை மறைப்பதிலுமே, ரூபவாகினியும்- ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் ஈடுபட்டன.




## புலிப்பாய்ச்சல் நடவடிக்கை

'ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தலி'ன் போது சிங்களப் படைகள் கைப்பற்றிய பரந்த நிலப்பகுதி - அதில் கொல்லப்பட்ட மக்கள் தொகை - இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை மற்றும் கண்மூடித்தனமான எறிகணை, வான் தாக்குதல்களாலும் குடாநாட்டு மக்கள்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1987 ஒப்பந்தம்:

# இந்தியாவின் அழுத்தமும் தலைவரின் உடையாத உறுதியும்

1987 யூலை 27ஆம் நாள் நள்ளிரவு, புதுடில்லியில், தலைவர் தங்கவைக்கப்பட்டிருந்த 'அசோகா விருந்தினர் விடுதி'யின் அழைப்பு மணி ஒலித்தது. இந்திய உள்நாட்டுப் புலனாய்வுத் திணைக்களத்தின் இயக்குனர் திரு. நாராயணன் கதவிற்கு வெளியே நின்று கொண்டிருந்தார். கதவு திறக்கப்பட்ட பின் உள்ளே வந்து, 'பிரதமரின் இல்லத்திலிருந்து நேராக இங்கு வந்துள்ளேன்' என்று பேச்சை ஆரம்பித்த அவர், 'பிரதமர் ராஜீவ் காந்தி உங்களை அவசரமாகச் சந்திக்க விரும்புகின்றார்' என்று கூறி, தலைவர் பிரபாகரனுக்கு அழைப்பு விடுத்தார். அதை ஏற்றுக் கொண்ட தலைவர் அவர்கள், திரு. நாராயணன் ஒழுங்கு செய்த வாகனத்தில் ஏறி, பிரதமர் ராஜீவின் இல்லம் நோக்கி விரைந்தார்.



பிரதமரின் இல்லத்தை வாகனம் சென்றடைந்ததும், முன்னே வந்த திரு. ராஜீவ்காந்தி, 'உம்மைப்பற்றி அறிந்திருக்கின்றேன்; நீர் ஒரு சிறந்த வீரன்' என்று புகழாரம் சூட்டியபடி, அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றார்.

சம்பிரதாயபூர்வமான நலன் விசாரிப்புகளும் முடிய, வந்த விடயம் பற்றிக் கதைப்பதற்கு இருபகுதியினரும் தயாரானார்கள்.

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அவரின் செயலாளரும், மற்றும் திரு. நாராயணன், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோரும் உடன் இருந்தனர். தலைவர் பிரபாகரனுடன் திரு. அன்ரன் பாலசிங்கமும் உடனிருந்தார்.

சொற்ப நேர அமைதியைக் கலைத்தபடி, பிரதமர் ராஜீவ் காந்தி பேசத் தொடங்கினார். தான் வரைந்த இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைப் பற்றி ஒரு மேலோட்டமான விளக்கத்தை அளித்துவிட்டு, 'இந்த ஒப்பந்தம் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் அதை எனக்கு விளக்குங்கள்' என்று தலைவரிடம் கேட்டார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இருந்த முக்கியமான குறைபாடுகள் பற்றித் தனது கருத்தை, தலைவர் அவர்கள் கூறத் தொடங்கினார்.

முதலில், 'தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் திட்டம் ஒரு முழுமையான சுயாட்சித் திட்டமாக இருக்கவில்லை. அதாவது, உருப்படியான சுயாட்சி அதிகாரங்கள் அதனிடம் இல்லை' என்று எடுத்துக் கூறினார். மேலும், 'இந்த மாகாணசபை முறையில், சிங்கள மத்திய அரசிற்கே அதிகூடிய அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன், நினைத்த உடனேயே இந்த மாகாணசபையைக் கலைத்துவிடும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு' என மாகாண சபையின் கையாலாகாத்தனத்தை ராஜீவ் காந்திக்கு எடுத்து விளக்கினார். அத்துடன், 'இந்த ஒப்பந்தம் தமிழரின் தாயகத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. வடக்கு-கிழக்கு இணைப்பென்பது தற்காலிகமானதாகவே இருக்கின்றது. நிரந்தர இணைப்புத் தொடர்பாக, கிழக்கில் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்படும் என்ற நிலைப்பாட்டை நாம் ஏற்கமாட்டோம். ஏனெனில், வடக்கு-கிழக்கு என்பது பிரிக்க முடியாத தமிழர் தாயகமாகும். எனவே, இணைப்பு-பிரிப்பு-அதற்கான தேர்தல் என்ற ஒப்பந்த விதிகளை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்' என்று தலைவர் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். அத்துடன், 'எமது மக்களின் அரசியல் வாழ்வைத் தீர்மானிக்கும் ஒரு அரசியல் ஒப்பந்தத்தை எமது மக்களுடன் கலந்தாலோசிக்காது செய்துவிட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக, 72 மணிநேரத்தில் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கோருவதை நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம்'



என, ஒப்பந்தம் தொடர்பான அபிப்பிராயத்தைத் தலைவர் அவர் கள் எடுத்துவிளக்கினார்.

தலைவரின் விளக்கத்தை அவதானித்து விட்டு ராஜீவ், 'வடக்கு -கிழக்கை இணைப்பதற்காக கிழக்கில் அபிப்பிராய வாக்கெடுப்பு என்ற விடயத்தை நாம் எப்படியும், பின்னர் நீக்கப்பார்க்கின்றோம். அதேபோல அதிக அதிகாரங்களை மாகாணசபைக்குப் பெற்றுக்கொடுக்க, பின்னர் முயற்சிக்கின்றோம். ஆனால் இப்போது, இந்த ஒப்பந்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்' என்று தலைவரிடம் வேண்டுகோள் விடுத்தார். திரு. ராஜீவ் காந்தியின் வாய்மொழி உத்தரவாதத்தை எப்படி நம்புவது எனத் தலைவர் சிந்தித்தார்.

'எழுத்தில் உள்ள ஓர் ஒப்பந்தத்தை ஏற்கின்றோம் என்று புலிகள் கையெழுத்திட்ட பின்னர், எழுதப்பட்டதற்கு முரணாக அதை நடை முறைப்படுத்தும்படி சிறீலங்கா அரசைக் கோர ராஜீவ் காந்திக்கு அதிகாரம் இல்லையே! அவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தாலும் எழுதப்பட்டதற்கு மேலாக தமிழர்களுக்கு அதிகளவு உரிமை கொடுக்க, பேரினவாதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா உடன்படுவாரா!

இந்தியப் பிரதமருக்கு, வெளிப்படையாகவே தலைவர் சொன்னார்: 'முக்கியமான பல குறைபாடுகளைக் கொண்ட இந்த ஒப்பந்தத்தை எம்மால் ஏற்க முடியாது' என்றார். தலைவர் தனது முடிவை மாற்றி ஒப்பந்தத்தை ஏற்கவேண்டும் என்று, ராஜீவ் காந்தி விடாப்பிடியாக வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தார். இந்தியப் பிரதமரின் வேண்டுகோளைத் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, அங்கிருந்த பண்ருட்டி இராமச்சந்திரனும் கேட்டுக்கொண்டார்.



இந்தியப் பிரதமர் எவ்வளவோ சொல்லியும், ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டிலிருந்து தலைவர் கீழிறங்கி வரவில்லை. இந்த நிலையில், தலைவரிடம் வேறொரு வேண்டுகோளை ராஜீவ் விடுத்தார். 'நீங்கள் (தலைவர்) கூறுவதுபோல் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் அதற்கு எதிராகச் செயற்படாமல் விடுவீர்களானால், உங்களுக்குச் சில நன்மைகளை நாங்கள் செய்வோம்' என்றார்.

அதாவது, வடக்கு-கிழக்கில் ஒரு இடைக்கால அரசை உருவாக்கி, அதன் நிருவாகப் பொறுப்பைப் புலிகளிடம் ஒப்படைப்பது. அடுத்தது, புலிகள் இயக்கம் ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கத் தேவையில்லை. சம்பிரதாயத்திற்காக ஒருதொகை ஆயுதங்களை ஒப்படைத்தால் போதும். அத்துடன், புலிகள் இயக்கத்தின் செலவுகளுக்காக மாதாந்தம் 50 இலட்சம் ரூபாவை (இந்திய ரூபா) இந்திய அரசு வழங்கும் என்று ராஜீவ் காந்தி உறுதி கூறிவிட்டு, இதையாவது ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்.

ஆனாலும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டிலிருந்து தலைவர் மாறவே இல்லை. ஆயினும், 'இந்த ஒப்பந்தத்தை அமுலாக்கிப் பார்ப்பதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்காது இருக்கின்றோம். நீங்கள் முயற்சித்துப் பாருங்கள். ஆயினும் எமது மக்களின் நலன்களைப் பாதிக்காதவரை நாங்கள் ஒப்பந்த அமுலாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம்' எனத் தலைவர் ராஜீவ் காந்திக்குத் தெரிவித்தார்.

பின்னர் விடயங்கள் மிகவேகமாக நடந்தன. தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது, வெளியாருடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்று புலிகளிற்கு விதித்திருந்த தடைகள் நீக்கப்பட்டன. இதே வேளை. இரண்டொரு நாளில் கொழும்புக்குப் பறந்த ராஜீவ் காந்தி, அங்கே ஜே. ஆருடன் இணைந்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, மீண்டும் இந்தியா திரும்பினார். ஓகஸ்ட் 2 ஆம் நாள், மீண்டும் தலைவர் தமிழீழம் வந்தார்.

'சேது அணை தாண்டிய வானரங்கள் போல' இந்தியப் படைகள் தமிழீழத்தில் குவிந்தன.

இந்தியப் பிரதமருக்குக் கொடுத்த வாக்குறுதியின் பிரகாரம், குறித்த தொகை ஆயுதங்களை ஒப்படைத்து, தனது நல்லெண்ணத்தைத் தலைவர் காட்டினார்.

ஆனால், வடக்கு-கிழக்கு இடைக்கால அரசை நிறுவும்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

இந்தியப் பிரதமர் எவ்வளவோ சொல்லியும், ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டிலிருந்து தலைவர் கீழிறங்கி வரவில்லை. இந்த நிலையில், தலைவரிடம் வேறொரு வேண்டுகோளை ராஜிவ் விடுத்தார். 'நீங்கள் (தலைவர்) கூறுவதுபோல் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் அதற்கு எதிராகச் செயற்படாமல் விடுவீர்களானால், உங்களுக்குச் சில நன்மைகளை நாங்கள் செய்வோம்" என்றார்.

இந்திய அரசின் இரட்டை வேடத்தை அம்பலமாக்க, சாகும்வரை சாத்வீகப் போரைத் தொடுக்கத் திலீபன் முன்வந்தான். ஆயினும் இந்திய அரசால் திலீபன் சாகடிக்கப்பட்டான். திலீபனின் தியாகச் சாவுடன் விழித்தெழுந்த தமிழ் மக்கள் இந்திய அரசுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கினர். இந்தவேளையிலேயே, எமது தளபதிகளான புலேந்திரன், குமரப்பா உட்பட 12 போராளிகள், இந்திய — சிங்கள சதிக்குப் பலியாகினர்.

மிரட்டல் இராஜதந்திரத்தைக் கையாண்டு பார்த்த டிக்சிற் அவர்கள், தலைவர் பிரபாகரனைத் தனது வலைக்குள் வீழ்த்த முயன்று தோற்றார். அதனால் கோபமடைந்த டிக்சிற், வார்த்தைக் குண்டுகளை அள்ளி வீசினார். அது எந்த நன்மையையும் டிக்சிற்றுக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை.

அரவணைக்கும் இராஜதந்திரத்தைக் கையாண்டு பார்த்து, தலைவர் பிரபாகரனைத் தனது வலைக்குள் வீழ்த்த முயன்று ராஜிவ் காந்தியும் தோற்றார்.

அதனால் கோபமடைந்த ராஜிவ் காந்தி, தலைவரைக் குறிவைத்து இந்தியப் படைகளை ஏவிவிட்டார். தீமையைத் தவிர அது எந்த நன்மைகளையும் ராஜிவ் காந்திக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பகையிருந்த துறைமுகத் புலி புகுந்து எடுத்தாரா



கடற் கரும்புலி
**மேஜர் தங்கம்**
(வீரையா மயில்வாகனம்
பதுளை)



கடற் கரும்புலி
**மேஜர் செந்தாளன்**
(நியூட்டன்)
(பிரான்சிஸ்-டக்ளஸ் கடற்கரை
வீதி பாசையூர், குருநகர்)




கடற் கரும்புலி
**கப்டன் தமிழினி**
(சிவப்பிரகாசம் கனிமொழி)
(ஆதிகோவிலடி,வல்வை)



கடற்புலி
**கப்டன் வில்லவன்**
(ஏரம்பமூர்த்தி ஜீவானந்தம்)
மட்டக்களப்பு



கடற்புலி
**கப்டன் கமலம்**
(குழந்தைவேல் சிறீரஞ்சனி)
பயிரிக்கூடல், காரைநகர்



கடற் புலி
**லெப்.கேணல் நரேஸ்**
கடற்புலிகளின் கடற்தாக்குதற் பிரிவுத் தளபதி
( சிவராஜசிங்கம் நவராஜன் )
திருமலை



கடற்புலி
**கப்டன் தாயகி**
(மகாலிங்கம் ரஞ்சினிதேவி)
வேலணை



கடற்புலி
**லெப். பூமதி**
(கனகரட்ணம் சாந்தினி)
கிழக்குத்தெரு - வல்வை



கடற்புலி
**லெப். தவமலர்**
(துரைசிங்கம் கேமாவதி)
இளவாலை



கடற்புலி
**லெப். யாழரசி**
(சின்னராசா அன்ரனிமாலா)
யாழ்ப்பாணம்

www.tamilarangam.net

# துள் இடி இடித்தது
# கதை முடித்தது

16-07-1995 அன்று காங்கேசன்துறைத் துறைமுகத்துள் பகைவனின் பலத்த கடற்கல வியூகத்தை உடைத்துப் போர்க் கப்பலைத் தகர்த்த கடற்கரும் புலிகள், கடற்புலிகள் அனைவருக்கும்

# வீரவணக்கம்

தியாகத்தின் சிகரங்களே!
உயிர்ப்பூவை ஊதித்தள்ளிய
கடல் வேங்கைகளே!
உங்களுக்கு கண்ணீரல்ல
எங்களின் காணிக்கை.
விரைவில் உங்கள் காலடியில்
தமிழீழத்தை வைத்துக் கை
தொழுவோம்.
சாவைத் தோள் மீது சுமந்த
சந்தன மேனிகளே!
உங்கள் நினைவைச் சுமந்து
நடப்போம்.
தலைவன் வழியில் பயணம்
தொடரும்.
விரைவில் பகைவன் கதைகள்
முடியும்.



கடற் புலி
**லெப்.கேணல் மாதவி**
கடற்புலிகளின் மகளிர் படையணி சிறப்புத் தளபதி
( திருநாவுக்கரசு திருச்செல்வி )
இன்பருட்டி அல்வாய் வடக்கு



கடற்புலி
**லெப். சோபிதா**
(தர்மலிங்கம் மாலதி)
பருத்தித்துறை



கடற்புலி
**2ம் லெப். அருள்மதி**
(வெற்றிவேலாயுதம் விஜயந்திரராணி)
விசுவமடு



கடற்புலி
**2ம் லெப். நித்தியா**
(மாரிமுந்து மஞ்சுளா)
குடத்தனை



கடற்புலி
**2ம் லெப் .மைவிழி**
(லூகிஸ் டொறேட்டா)
குருநகர்



கடற்புலி
**2ம் லெப் .நதியரசி**
(செல்வராசா சாந்தவதனி)
முல்லைத்தீவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1987 ஒப்பந்தம்...

விடயத்தில் ஜே.ஆர் இழுத்தடித்தார். அதற்குப் பதிலாக கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை முடுக்கிவிட்டார். புதிய பொலிஸ் நிலையங்களைத் திறந்தார். இது ஒரு புறமிருக்க, மறுபுறத்தில், இந்தியப் பிரதமர் புலிகளின் முதுகில் குத்தத் தொடங்கினார். சமூகவிரோதிகளை-மக்களால் அந்நியப்படுத்தப்பட்ட ஆயுதக் குழுக்களை - மீண்டும் தமிழீழத்திற்குக் கூட்டிவந்து, அவர்களுக்கு ஆயுதங்களையும் வழங்கி, புலிகளுக்கு எதிராகத் திருப்பிவிட்டார். தலைவருக்கு வாக்குறுதி அளித்தது போலல்லாது, ஜே. ஆரின் அரசுக்குச் சார்பாக ராஜீவ் காந்தி நடக்கத் தொடங்கினார்.

இந்திய அரசின் இரட்டை வேடத்தை அம்பலமாக்க, சாகும்வரை சாத்வீகப் போரைத் தொடுக்கத் திலீபன் முன்வந்தான். ஆயினும் இந்திய அரசால் திலீபன் சாகடிக்கப்பட்டான். திலீபனின் தியாகச் சாவுடன் விழித்தெழுந்த தமிழ் மக்கள் இந்திய அரசுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கினர். இந்தவேளையிலேயே, எமது தளபதிகளான புலேந்திரன், குமரப்பா உட்பட 12 போராளிகள், இந்திய - சிங்கள சதிக்குப் பலியாகினர். மக்களின் கோபாவேசத்தை வெளியுலகிற்குத் தெரிய விடாமல் தடுக்க நிதர்சனம், ஈழமுரசு போன்ற தொடர்பு சாதனங்களை இந்தியப் படைகள் நாசம் செய்தன. அத்துடன், இந்திய - புலிகள் போரும் தொடங்கியது.

இந்திய - இலங்கை ஒப்பந்தமானது இந்த இரண்டு அரசுகளின் நலன்களையும் நிறைவேற்றும் ஒரு வஞ்சக உடன்பாடாகும்.

இந்திய அரசின் பிராந்திய நலனைப் பாதுகாக்க இலங்கை அரசு உடன்பட வேண்டுமாயின், இலங்கை அரசின் நலனுக்கு ஆபத்தை விளைவிக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்க இந்திய அரசு உதவவேண்டும். இதுதான், ராஜீவுக்கும் - ஜே. ஆருக்கும் இடையில் நடந்த எழுதப்படாத உடன்பாடு.

தனது நலனைப் பேணுவதற்காக தமிழ் மக்களது நலனை வேள்விக்கிடாய் ஆக்கி, சிங்களப் பேரினவாதப் பூதத்திற்குக் காணிக்கையாக்க இந்தியா முயன்றது.

இந்த நோக்கத்துடன் தலைவரைக் கொல்வதற்காக ஒரு 'விசேட கொமாண்டோ அணியை' ராஜீவ் காந்தி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தார். அதன்மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொன்று, தனது ஒப்பந்த பங்குதாரரைத் திருப்திப்படுத்த ராஜீவ் காந்தி முயன்றார்.

போர் விஸ்வரூபம் எடுத்தது. இந்தியப் படைகளால் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்தப் போரைத் தடுத்து நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதற்காக, ஒரு போர் நிறுத்தத்தைக் கொண்டு வருமாறு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு, கடிதங்கள் மூலமாகத் தலைவர் வேண்டுகோள் விடுத்தார். தலைவரின் கடிதங்களை ராஜீவ் காந்தி பொருட்படுத்தவேயில்லை.

தமிழ் நாட்டில் அப்போது தங்கியிருந்த எமது மூத்த உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முரசொலிமாறனை ராஜீவ் காந்தியிடம் தூது அனுப்பி, போரை நிறுத்தும்படி வேண்டினர். பிரதமர் அலுவலகத்தில் வைத்து தன்னைச் சந்தித்த முரசொலிமாறனிடம் ராஜீவ் சொன்னார்: 'பிரபாகரன் என்னுடைய காலடியில் வந்து விழும்வரை போரை நிறுத்த மாட்டேன்.' ராஜீவ் காந்தியின் எச்சரிக்கையைக் கேட்டுவிட்டு தி.மு.க தலைவர் திரு. கருணாநிதி கூறினார்: 'ஏன் இந்தியப் படையுடன் சண்டையிடுகின்றீர்கள்? பூண்டோடு அழிந்து விடப் போகின்றீர்கள். உடனேயே ஆயுதங்களுடன் சரணடைந்து உங்க ளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்று 'அறிவுரை' கூறினார்.

தலைவர் பிரபாகரனைக் கொன்று போரை வென்றுவிட்ட ஒரு வெற்றிச் செய்திக்காக, நேருவின் பேரன் டில்லியில் தவங்கிடந்தார். ஆனால், அவர் விரும்பிய செய்தி அவரைச் சென்றடையவேயில்லை!

மிரட்டல் இராஜதந்திரத்தைக் கையா ண்டு பார்த்த டிக்சிற் அவர்கள், தலைவர் பிரபாகரனைத் தனது வலை க்குள் வீழ்த்த முயன்று தோற்றார். அதனால் கோபமடைந்த டிக்சிற், வார்த்தைக் குண்டுகளை அள்ளி வீசினார். அது எந்த நன்மையையும் டிக்சிற்றுக்குப் பெற்றுக் கொடுக்க வில்லை.

அரவணைக்கும் இராஜதந்திரத்தைக் கையாண்டு பார்த்து, தலைவர் பிரபாகரனைத் தனது வலைக்குள் வீழ்த்த முயன்று ராஜீவ் காந்தியும் தோற்றார்.

அதனால் கோபமடைந்த ராஜீவ் காந்தி, தலைவரைக் குறிவைத்து இந்தியப் படைகளை ஏவிவிட்டார். தீமையைத் தவிர அது எந்த நன்மைகளையும் ராஜீவ் காந்திக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை.

# இலங்கையின் இனப்பிரச்சனை...

பங்களிப்பின்றி எந்த ஒரு தீர்வுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடியாது. அவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டம் நீதிக்கும் தர்மத்துக்குமானது. சுயநிர்ணய உரிமைமூலம் எமது மண்ணைப் பாதுகாக்கவே இப்போராட்டம் நடைபெறுகிறது. இப்போராட்டத்தைச் சர்வதேச உலகம் அங்கீகரிக்க வேண்டிய வகையில் நீங்கள் உதவவேண்டும்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் புலிகளின் பங்கு மிக முக்கியமானது. எந்தத் தீர்வுத்திட்டமானாலும் புலிகளுடன் பேசியே அமுல்படுத்த சிறிலங்கா முனைய வேண்டும். மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்த ஐநா. வின் ஆலோசகர், பின்னர் பல இடங்களையும் சென்று பார்வையிட்டதுடன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் ஆகியோருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்த ஆலோசகர் ரோலண்ட் கட்சன், நோயாளர்கள் சிலரை நேரில் பார்வையிட்டுக் குறைகளைத் தெரிந்து கொண்டார்.

யாழ் சிறீலங்கா அரச செயலகத்திற்குச் சென்று திட்டப் பணிப்பாளர் எஸ். பத்மநாதன் தலைமையில் ஊழியர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்ட இவர், விவசாய உள்ளீடுகளின் தேவைபற்றியும் தெரிந்து கொண்டார். யாழ். ஆயர் இல்லத்தில் ஆயரின் செயலாளர் அருட்திரு. கே. தவராஜசிங்கத்தையும் ரோலண்ட் கட்சன் சந்தித்தார்.

வேண்டும்.

## யாழ். நகரில் ஐ.நா.அதிகாரிகளிடம் பொதுமக்கள்நேரடி வேண்டுகோள்

"ஆயுதப் போரையும் உணவுப் போரையும் இன்று தமிழ் மக்களாகிய நாம் ஒரே நேரத்தில் எதிர்கொண்டுள்ளோம். இவ்விரு போர்களையும் சிறிலங்கா அரசு அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகவே நடத்துகின்றது. வரலாற்று ரீதியாக அமுலாகாத பல தீர்வுத்திட்டங்களைக் கண்டு நாம் களைத்துவிட்டோம். உரிமைகளுக்காகப் போராடும் மக்களைக் கலந்தாலோசிக்காமல், அவர்களோடு பேச்சுக்கள் நடத்தாமல் எந்தத் தீர்வுத்திட்டத்தையும் அமுல் செய்யமுடியாது. ராஜீவ்-ஜேஆர் சமாதான ஒப்பந்தத்தில் எமக்கு சோகமான ஒரு பாடமே கிடைத்தது. அவ்வாறானதொரு சோகமே சனாதிபதி முன்வைத்துள்ள தீர்வுத்திட்ட யோசனைகளால் எமக்கு ஏற்படப்போகிறது. நாம் தற்காலிக சமாதானத்தை விரும்பவில்லை. நிரந்தரமான சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமாதானத்தையே விரும்புகின்றோம். எனவே இராணுவ, பொருண்மிய அழுத்தங்களை நீக்கி பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்புடனான பேச்சுவார்த்தையின்மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐநா. உதவவேண்டும்"

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஐநாவின் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான விவகார ஆலோசகர் ரோலண்ட் கட்சனிடம் யாழ். குடாநாட்டின் வெகுசன ஒன்றியப் பிரதிநிதிகள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். யாழ். குடாநாட்டில் உள்ள இந்து, கிறிஸ்தவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழாசிரியர்கள் சங்கம், இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமாதானத்துக்குமான இயக்கம் என்பனவற்றின் பிரதிநிதிகள் இச்சந்திப்பின்போது பங்குபற்றினர். அவர்கள் மேலும் கூறியதாவது,

"நாங்கள் தற்காலிக சமாதானத்தை விரும்பவில்லை. தமிழர்களின் தாயக பாரம்பரிய பிரதேசத்தைத் தனித் தேசியமாக அங்கீகரிப்பதன் மூலமே இங்கு நிரந்தர சமாதானம் ஏற்படும்.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் போராட்டச் சக்தியாகப் போராடி வருகின்றனர். அவர்களது

## ஒரே வழி - சர்வதேச அங்கீகாரம்

இந்நிலையில், தமிழர்களின் தாயக பாரம்பரிய பிரதேசத்தை தனித்தேசியமாக அங்கீகரிக்கும்படி சர்வதேச சமூகத்தை வற்புறுத்துவதன் மூலமும் சுயநிர்ணய உரிமை மூலம் தமிழரது போராட்டமே இது என்பதை உலகு உணர வைப்பதன்மூலமும் மட்டுமே நிரந்தர சமாதானத்தினை தமிழ் மக்களிடை தோற்றுவிக்கலாம்.

இதனை அடிப்படையாக கொண்டு புலம் பெயர்ந்த தமிழர்கள் சுவிசில் ஐநா. முன்றலில் நடத்தியது போன்ற எழுச்சி கூட்டங்களை உலகின் தலைநகரங்களில் நடாத்தி வர திட்டமிட்டுள்ளனர்.

இவ்வரிசையில் இலண்டனில் 'ஹூட் கிறீன்'இல் 'அலெக்சாண்ந்திரப் பலஸ்' எனுமிடத்தில் செப்டெம்பர் 9ஆம் நாள் மதியம் 1மணிமுதல் ஐந்து மணிவரை மாபெரும் எழுச்சிக் கூட்டமொன்றை நடாத்த சர்வதேச தமிழர் ஒன்றியம் திட்டமிட்டுள்ளது. இதில் பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் கலந்து கொண்டு ஐநா. வின் கவனம் மேலும் பலப்பட வழிசெய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 2 டோரா படகுகள்....

நடாத திய இக்கப்பல் போக்குவரத்தின் ஓர் அம்சமாகவே இப் பயணிகள் கப்பல் பயன்பட்டதாகத் தெரிகின்றது. இது பயணிகளை மாத்திரமல்ல குடாநாட்டிலுள்ள இராணுவத்திற்குத் தேவையான தளபாட, உணவு விநியோகங்களையும் கொண்டு சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலில் 121 பயணிகளும் 8 மாலுமிகளும் இருந்ததாக கப்பல்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை இக்கப்பலில் உள்ள பயணிகளின் நிலைமை தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவினருடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தனர். இப் பயணிகள் எவ்வித நிபந்தனைகளுமின்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டு அனைவரும் எவ்வித நிபந்தனைகளுமின்றி தங்கள் இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 15 சிறுவர்கள் உட்பட அனைத்துப் பயணிகளும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துள்ளார்கள் என்றும் முகமட் யுனைட் என்ற அரச அதிகாரி தெரிவித்துள்ளார். இதேவேளை இக்கப்பலின் எட்டு சிப்பந்திகளும், எட்டு ஈபிடிபி உறுப்பினர்களும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை டோராப் படகுகளின் மூழ்கடிப்பினால் அதிர்ச்சியுற்ற சிறிலங்காவின் பாதுகாப்பமைச்சு அவசர அவசரமாகக் கூடியது. இதில், சிறிலங்கா அரசினால் புரட்டாதி மாத முடிவுக்குள் யாழ். குடாநாட்டில் ஆரம்பிக்க எண்ணியிருந்த முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தை நடத்துவது குறித்து, இருவிதமான அபிப்பிராயங்கள் அரச மட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

3ஆம் ஈழப்போர் தொடங்கியதின் பின், சிறிலங்கா அரசிடம் உள்ள வேகத் தாக்குதல் டோராப் படகுகள் 13இல் இரண்டும், பீரங்கிப் படகுகள் 7இல் மூன்றும், கட்டளைக் கப்பல் ஒன்றும் அழிக்கப்பட்டுவிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## அரசின் தீர்வுத்திட்ட யோசனையில் சிங்களக் குடியேற்றக் காணிகளை வடக்கு-கிழக்கு இழக்கும்

அரசு முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத்திட்ட நகலில், சிங்களக் குடியேற்றங்கள் நிரந்தரமாக்கப்படக் கூடியதான விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தென்பகுதி மாகாண எல்லைகள் மாற்றங் காணாதவிடத்து, வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து சில பகுதிகளை வேறு மாகாணங்களுக்கு மாற்றும் விதமாக அரசியல் தீர்வுத்திட்டம் அமைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின்படி, கொக்கிளாய் கிராமம் தவிர்ந்த மணலாற்றின் ஏனைய பகுதிகள் வடமத்திய பிராந்திய சபையுடன் இணைக்கப்படவுள்ளன.

இதேபோன்று கிழக்கில் கன்னல, நிக்வெவ, பள்ளிக்குடா, வெலிகந்தை, மாகாஓயா, பக்கியெல்ல, அம்பாறை என்பன கிழக்கு மாகாணத்திலிருந்து நீக்கப்பட்டு வடமத்திய, ஊவா பிராந்தியங்களுடன் இணைக்கப்படவுள்ளன.

## பொலநறுவையில்..

படையினரிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களுடன் தளம் திரும்பியதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றது.

இது பற்றிய தளச் செய்திகள் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெறவில்லை.

www.tamilarangam.net



# முன்னோக்கிய பாய்ச்சல் மீது புலிப்பாய்ச்சல்...

பீதியடைந்த நிலையிலேயே காணப்பட்டனர். இந்த நிலையில்தான், சிங்களப் படைகளின் இராணுவ நடவடிக்கைக்குத் தக்க பதிலடி ஒன்று கொடுக்க, தலைவர் ஆயத்தங்களைச் செய்தார். புலிவீரர்களின் பாரிய படையணி ஒன்றை ஒருபெரும் எதிர்த்தாக்குதல் ஒன்றுக்காகத் தயார்ப்படுத்தினார். சண்டிலிப்பாய் - அளவெட்டிப் பகுதிகளில் நிலைகொண்டபடி, யாழ். நகரை நோக்கிய அடுத்த கட்ட நகர்விற்காகக் காத்திருந்த படையினர் மீது, 14.07.1995 அன்று அதிகாலை, புலிவீரர்கள் ஒரு பெருந்தாக்குதலைத் தொடுத்தனர். தலைவரின் நேரடி நெறிப்படுத்தலில் நடந்த இந்தப் பதில் இராணுவ நடவடிக்கைக்குப் 'புலிப்பாய்ச்சல்' எனத் தலைவரே பெயர் சூட்டினார். பெயரிற்கேற்றாற்போல புலி வீரர்கள் சிங்களப் படைமீது பாய்ந்து, அதைத் துவம்சம் செய்தனர்! பகல்போல நிலவு இருந்த அந்த இரவில், புலிவீரர்கள் துணிகரமான முறையில் தொடுத்த புலிப்பாய்ச்சல் நடவடிக்கையால், 'முன்னேறிப்பாய்தலில்' பங்குகொண்ட படையினர் சிதறிப் பின்னோக்கி ஓடினர்! அவர்களது கட்டளைப்பீடமும் - விநியோகமார்க்கமும் சிதைந்து போயின. நூறிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். அத்துடன், தரைப்படைக்குத் துணையாகக் குண்டுவீச்சில் ஈடுபட்டபடி - சிங்களச் சிப்பாய்களின் போரிடும் உறுதியை ஊக்குவித்துக் கொண்டிருந்த, 'புக்காரா' குண்டுவீச்சு விமானம் அவர்களின் கண்முன்னாலேயே சுட்டு வீழ்த்தப்பட்டதால், சிங்களப் படைகளின் நம்பிக்கையும் சிதறிப்போனது.




இதேவேளை, 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான விநியோகங்களைச் செய்துகொண்டிருந்த 'எடித்தாரா' என்ற கட்டளைக் கப்பல், காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து, 16.07.1995 அன்று அதிகாலை, கரும்புலித் தாக்குதல்மூலம் மூழ்கடிக்கப்பட்டது. 2628 தொன் நிறையுடைய இந்தக் கட்டளைக் கப்பலைச் சிங்கள அரசு இழந்ததால், 'முன்னோக்கிப் பாய்தலின்' விநியோக வழியும் மூடப்பட்டுவிட்டது.

இவ்விதம், 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கைக்காக மூன்று போர் அரங் குகளிலும் பங்குகொண்டிருந்த சிறீலங்கா வின் முப்படைகளும், புலிப்பாய்ச்சலுக்கு இலக் காகிப் பாரிய அழிவுகளைச் சந்தித்தன. இதனால், 'முன்னோக்கிப் பாய்தல்' பலத்த பின்னடைவைச் சந்தித்தது.

'புலிப்பாய்ச்சல்', நடவடிக்கையின் வேகத்தையும் - வீரியத்தையும் - அது சிங்களப் படைகளுக்குக் கொடுத்த இழப்புக்களையும் கணிப்பீடு செய்த சிங்களத் தளபதிகள், தமது 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையை நிறுத்தி, கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து விரைவாகப் பின் வாங்க முடிவெடுத்தனர்.

புலிகளின் பாரிய சேனை ஒன்றை மிக விரைவாக ஒன்றிணைத்து, தாக்குதல் வியூகங்களையும் - தந்திரோபாயங்களையும் அவர்களுக்கு விளக்கி, மூவகைப் போர் அரங்குகளிலும், ஒழுங்கான முறையில், தலைவர் அவர்கள் படைநகர்த்தலையும் - தாக்குதல்களையும் செய்வித்த விதம், சிங்களத் தளபதிகளை வியப்பிற்குள்ளாக்கியிருக்கும்.

> காங்கேசன்துறை துறைமுகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த எட்டு 'டோறா" சண்டைப் படகுகளுடன் கடற் புலிகள் நடாத்திய சிலமணிநேரக் கடற்சண்டையும், ஒரு முக்கிய இராணுவ பரிமாணத்தைப் பெற்றுவிட்டது. ஒரு டோறா படகைக் கொண்டு வடபுலக் கடற்பரப்பையே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த சிங்களக் கடற் படை, இப்போது, எட்டு டோறாப் படகுகளை ஒருங்கே வைத்துக்கொண்டும் ஒரு கட்டளைக் கப்பலைப் பாதுகாக்க முடியாது போய்விட்டது.

## புலிப்பாய்ச்சலின் விளைவுகள்

புலிகள் இயக்கம் பெயர்சூட்டி நடாத்திய தாக்குதல்கள் எல்லாவற்றுக்குள்ளும் 'புலிப்பாய்ச்சல்' தனித்துவம் மிக்கதாக இருக்கின்றது. அதற்குக் காரணம், மூன்று போர் அரங்குகளிலும் (தரை-கடல்-வான்) 'புலிப்பாய்ச்சல்' நடாத்தப்பட்டதே ஆகும். அத்துடன், பீதியுற்றிருந்த குடாநாட்டு மக்களின் மனங்களில் நம்பிக்கை விதையைத் தூவிய சமராகவும் 'புலிப்பாய்ச்சல்' அமைந்துவிட்டது. அதேவேளை, குடாநாட்டைக் கைப்பற்றும் எண்ணத்துடன் சிங்களப் படைத்துறைத் தலைமை வரைந்த ஒரு போர்த்திட்டத்தை, 'புலிப்பாய்ச்சல்' மறுபரிசீலனை செய்யவைத்து விட்டது.

'புலிப்பாய்ச்சலி'ன் போது 'புக்காரா' குண்டுவீச்சு விமானம் ஒன்றும் - சக்திவாய்ந்த கட்டளைக்கப்பல் ஒன்றும் அழிக்கப்பட்டுவிட்டன. தனித்த ஒரு விமானம், தனிய ஒரு கப்பல் என்றில்லாமல் சிங்கள வான்படைக்கும் கடற்படைக்கும் இந்த இழப்புக்கள் பெரிய பாதிப்புக்களைக் கொடுத்துள்ளன. ஏனெனில் புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதங்களில் இருந்து பாதுகாப்புத் தேடுவதற்காகவே, 8,000 அடிக்கு மேலே நின்று விமானங்கள் குண்டுவீசின. அத்துடன் இத்தகைய விமான எதிர்ப்பு ஆயுதங்களை ஆபத்து நிறைந்த போர்முனைக்குப் புலிகள் எடுத்துவரமாட்டார்கள் என்ற ஒரு நம்பிக்கையும், சிங்களத் தளபதிகளுக்கு இருந்தது. அதனால்தான் சமர்க்களத்துக்கு மேலேயே பறந்து திரிவதில் அக்கறை காட்டின. ஆனால், சிங்கள வான்படையின் அந்த நம்பிக்கையும் - முற்பாதுகாப்பும் பொய்த்துவிட்டன. இதனால், இனிவரும் சமர்களில் எப்படித் தமது பங்கை ஆற்றுவது என்று, சிங்கள வான்படை குழம்பியபடி உள்ளது.

இதேபோன்றுதான், சிங்களக் கடற்படையும் திகைத்தபடி உள்ளது. பூரண பாதுகாப்பு நிறைந்த ஒரு துறைமுகத்தில் - அதுவும் சமர் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதியில் - கடற்புலிகளின் துணையுடன் வெற்றிகரமாக உட்புகுந்து கடற்கரும்புலிகள் நடாத்திய தாக்குதலில், வடபுலக் கடலில் நம்பிக்கை நட்சத்திரமான 'எடித்தாரா' மூழ்கிவிட்டது. கரும்புலிகளின் மற்றைய படகு விபத்துக்குள்ளானதால், அதன் இலக்கான தரையிறங்கு கலம் தப்பிப் பிழைத்துவிட்டது. இதேவேளை, காங்கேசன்துறை துறைமுகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த எட்டு 'டோறா' சண்டைப் படகுகளுடன் கடற்புலிகள் நடாத்திய சிலமணிநேரக் கடற்சண்டையும், ஒரு முக்கிய இராணுவ பரிமாணத்தைப் பெற்றுவிட்டது. ஒரு டோறா படகைக் கொண்டு வடபுலக் கடற்பரப்பையே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த சிங்களக் கடற்படை, இப்போது, எட்டு டோறாப் படகுகளை ஒருங்கே வைத்துக்கொண்டும் ஒரு கட்டளைக் கப்பலைப் பாதுகாக்க முடியாது போய்விட்டது. 'எடித்தாரா'வின் இழப்புடன், வடபுலக் கடற்பரப்பு மீதான கண்காணிப்பும் - வடபுலப் படை முகாம்களுக்கான விநியோகமும் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. சுருக்கமாகச் சொன்னால், 'புலிப்பாய்ச்சலின்' விளைவால், சிங்கள அரசின் முப்படைகளினது நகர்திறனும் கடுமையாகச் சேதப்பட்டு விட்டது.

இதேவேளை, மரபுவழிப் போர்முனையில் புலிகளுடன் போரிட்டால் அரசப் படைகள் பாரிய வெற்றியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை, இராணுவத் தலைமைக்கு உண்டு. பெரியதொரு ஆட்பலத்தைக் கொண்ட தங்களது முப்படைப் பலமும் - அதற்கு இருக்கும் பாரிய படைக்கல சக்தியும் அந்த நம்பிக்கைக்குப் பிரதான காரணம் ஆகும். 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையிலும் பத்தாயிரத்திற்கும் அதிகமான படையினர் பங்கு கொண்டிருந்தனர். அதில் பயன்படுத்தப்பட்ட படைக்கல சக்தியின் அளவு (எறிகணைகள்-ரவைகள்-விமானக் குண்டுகள்) உண்மையில் பாரியதாகும். ஆனாலும், படையினரால் சமரை வெல்ல முடியவில்லை. எனவே, மரபுவழிப் போர்முறைமூலம் இடங்களைக் கைப்பற்றுதல் என்பதுபோல, கைப்பற்றப்பட்ட இடங்களைப் பாதுகாத்துக்கொள்வது என்பதும் மிக முக்கியமானதாகின்றது. புலிவீரர்களின் போர்த்திறனும்-போர்த்தந்திரங்களும் கைப்பற்றப்பட்ட இடங்களில் இருந்து படையினரை விரட்டியடித்துவிட்டன. ஆயினும், சிங்களப் படைகளின் ஆட்தொகைக்குப் புலிப்படையின் ஆட்தொகையும் ஈடுகொடுக்காதுவிட்டால், நிரந்தர வெற்றியைப் புலிப்படை பெறமுடியாதுபோய்விடும். எனவே, இனிவரும் சமர்களில் புலிகள் இயக்கம் வெற்றிபெற வேண்டுமாயின், அதன் ஆட்பலம் அதிகரிக்கப்பட்டேயாக வேண்டும்.

புலிகள் இயக்கத்திற்கான ஆட்தொகையின் அவசியத்தைப் பொறுத்தளவில் போரின் வளர்ச்சிக் கட்டத்தை அது சுட்டிக்காட்டுவதுடன், வெற்றியின் இன்றியமையாத தேவையாகவும் அது மாறிவிட்டது.

## வளர்ச்சியும் வெற்றியும்

14.07.1991 அன்று, சிங்களப் படையின் ஒரு வெற்றிகரமான கடல்வழித் தரையிறக்கம் வெற்றிலைக்கேணியில் நடந்தது. அந்தத் தரையிறக்கத்துடன், ஆனையிறவுத் தளம் மீது புலிவீரர்கள் நடாத்திய தாக்குதலின் போக்கு திசைமாறி, சிங்களப் படைகளுக்குச் சாதகமாக மாறிவிட்டது.

அதேபோல, சரியாக 4 ஆண்டுகளுக்குப் பின்னர், 14.07.1995 அன்று சண்டிலிப்பாய் - அளவெட்டிப் பகுதியில் புலிவீரர்கள் செய்த 'புலிப்பாய்ச்சலால்' சிங்களப் படைகளின் ஒரு இராணுவ நடவடிக்கையே சிதறடிக்கப்பட்டுவிட்டது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திய அரசியல்.... புதிய அத்தியாயம்

அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறப்போகும் இந்திய 'லோக் சபா' விற்கான பொதுத் தேர்தலைத் தொடர்ந்து - இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தோன்றலாம் என, உபகண்ட அரசியல் விமர்சகர்கள் ஆரூடம் கூறியுள்ளனர். ஏதாவது ஒரு கட்சி தேர்தலில் அமோக வெற்றிபெற்று அரசை அமைக்கும் வழமை அற்றுப் போய், பல கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டரசு ஆட்சியைக் கொண்டு நடாத்தும் முறை ஆரம்பமாகலாம் என்பதே அந்த ஆரூடமாகும். இந்த ஆரூடத்திற்குப் பிரதான காரணம், இந்தியாவின் பிரதான தேசியக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் எழும்ப முடியாத வீழ்ச்சியும் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சி உட்பட ஏனைய தேசியக் கட்சிகளின் எழுச்சியின்மையும் ஆகும்.

இதேவேளை, இந்தத் தேசியக் கட்சிகளுக்கு தேசிய ஆளுமைகொண்ட தலைவர்கள் இல்லாமையால், தேசம் தழுவிய தேர்தல் வெற்றியை இவற்றில் எந்தவொரு கட்சியும் பெறமாட்டாது என்பதும், இந்தப் புதிய போக்கிற்கு ஒரு காரணியாக அமையும். இவை ஒருபுறமிருக்க, தேசிய ஆளுமைமிக்க தலைவர்களை இந்தக் கட்சிகள் கொண்டிராதுவிட்டாலுங்கூட, சராசரி இந்தியரின் சமூக வாழ்வை முன்னேற்றிவிடக்கூடிய நல்ல அரசியல் கொள்கைத் திட்டங்களோ அல்லது பொருண்மிய முன்னேற்றத் திட்டங்களோ அவற்றிடம் இல்லை. அத்துடன், தேசியக் கட்சிகள் என்று அவை அழைக்கப்பட்டாலுங்கூட, பிராந்தியவாதக் கண்ணோட்டங்களையும் மதவெறிக் கருத்துக்களையும் சாதிவாரிப் பார்வைகளையும் கருத்தில் எடுத்தபடிதான் இந்தக் கட்சிகளின் தலைமைகள் அரசியல் நடாத்த முனைகின்றன. இதேவேளை ஆட்சியியல் என்ற போர்வையில் அர சியல்வாதிகள் புரியும் அதிகாரத் துஸ்பிரயோகங்களும், ஊழல்களும், தன்னல நடவடிக்கைகளும், பதவிக்கான குத்துவெட்டுக்களும் இந்திய மக்களைச் சலிப்புறச் செய்துள்ளன. இவற்றால் யதார்த்தம் பற்றிய விழிப்புணர்வு இப்போது அவர்களிடம் அதிகரித்துள்ளது.

இந்திய வாக்காளர்களிடம் தோன்றியுள்ள இத்தகைய விழிப்பு நிலைக்கு வடிகால் அமைப்பதுபோல, மாநிலவாரியாக ஆளுமைகொண்ட தலைவர்கள், ஆங்காங்கே உருவாகத் தொடங்கியுள்ளனர், அல்லது 'இந்தியத் தேசியம்' என்ற பொய்மைத் திரை விலகிவருவதால் தோன்றிவரும் மாநிலவாரியான தேசியவாதங்களும், இந்திய அரசியலில் ஏற்படப்போகும் அந்தப் புதிய போக்கிற்கு உற்சாகமூட்டுவனவாகவே இருக்கின்றன.

பெரும்பான்மை பலங்கொண்ட தனிக்கட்சி அரசு என்ற நிலைக்குப் பதிலாக, பலகட்சிகள் கொண்ட கூட்டரசு என்ற நிலைப்பாடு, இந்தியாவிற்கு ஒரு உறுதியான ஆட்சியைக் கொடுக்கமாட்டாது என்று எதிர்பார்க்கலாம். கூட்டரசிலுள்ள ஏதாவது ஒரு கட்சி திருப்திப்படுத்தப்படாது விடப்படும்போது ஆட்சியே கவிழும் அபாய நிலை, எந்த நேரமும் எழலாம். இதுகாரணமாக, தேசம் தழுவிய முக்கிய முடிவுகளையோ அல்லது அயல்நாடுகள் தொடர்பான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையோ அல்லது ஆத்திரமூட்டும் செயற்பாடுகளையோ எழுந்தமானமாக மத்திய அரசால் செய்யமுடியாது போகலாம். இதன் காரணமாக, தென்னாசியப் பிராந்தியத்தின் சிறிய நாடுகள் அச்சமின்றி வாழும் நிலை ஒன்று எழலாம். அந்தவகையில் அதை ஒரு நல்ல மாற்றம் என்றே கூறலாம்.

இதேவேளை, இந்திய வாக்காளர்களது வாக்களிக்கும் மனநிலையை ஆய்வு செய்து பார்த்தால், சட்டசபைத் தேர்தல்களின்போது மாநிலவாரியான ஒரு கட்சியையும், 'லோக்சபா' தேர்தல்களின்போது தேசியக்கட்சி ஒன்றையும் தெரிவுசெய்யும் விந்தையைக் காணமுடியும். இந்த மனப்போக்கிற்கு, மாநிலவாரியான கட்சிகளும் இதுவரை உற்சாகமளித்து வந்தன. ஆனால் இதே மனப்போக்கை இனிவரும் தேர்தல்களிலும் எதிர்பார்க்கமுடியாத அளவிற்கு, இந்திய அரசியல் களத்தில் விரைவான பலமாற்றங்கள் நடைபெறத் தொடங்கிவிட்டன.

இனிவரும் காலங்களில், மத்தியில் ஒரு கூட்டாக அமையும் என்ற நம்பிக்கையே எங்கும் விரவிக் கிடக்கின்றது. இதனால் மத்திய அரசிடமிருந்து காரியங்களைச் சாதிப்பதற்கு - முன்னரைவிட - மாநில அரசுகளுக்கு ஒரு அதிகார பேர பலம் தேவை. அதாவது கூட்டரசுடன் பேரம் பேசுவதற்கான துருப்புச்சீட்டாக 'லோக் சபா' உறுப்பினர்களை வைத்திருக்க எல்லா மாநிலக் கட்சிகளும் விரும்பும். எனவே, இதுவரை காலமும் செய்ததுபோல, தேசியக் கட்சி ஒன்றிக்கு தனது மாநிலத்திலுள்ள 'லோக் சபா' தொகுதியைத் தாரைவார்த்துக் கொடுக்க மாநிலவாரியான ஆளும் கட்சிகள் விரும்பமாட்டா. இந்த நிலை, ஒரு தொங்கு நாடாளுமன்றத்தை மத்தியில் ஏற்படுத்தும். இத்தகைய ஒரு அரசியல் போக்கு மாநிலவாரியான தேசியவாதத்தை நிச்சயம் வளர்த்துவிடும். அத்துடன் இந்திய உபகண்டத்தில் தேசிய விடுதலைக் குமுறல்களையும் ஊக்குவித்துவிடும். எது எப்படியோ, புதிய நூற்றாண்டின் ஆரம்பமே இந்திய ஆளும் வர்க்கத்துக்குத் தலைவலி நிறைந்த காலமாக இருக்கப்போகின்றது.

# நம்பகத்தன்மை என்ன?

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறீலங்கா அரசு தயாரித்து வந்த இனப்பிரச்சனைக்கான அரசியற் தீர்வு நகல் வெளிவந்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கலுடன் வெளிவந்துள்ள இத்தீர்வு நகல்திட்டம் பற்றி விமர்சிக்கும் நோக்கம் தற்பொழுது எமக்கில்லை.

ஏனெனில் இந்நகற்திட்டம் குறித்த விரிவான தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை என்பது ஒருபுறம் இருக்க, அரசாங்கத்தின் நகற் திட்டத்தின் நம்பகத்தன்மை குறித்தும் சந்தேகங்கள் பல உள்ளன.

இதில் அரசாங்கத்தின் நகற் திட்டத்தின் நம்பகத்தன்மை குறித்து ஒரு பலமான கேள்வியைத் தற்பொழுது எழுப்புவதற்குப் போதிய காரணங்கள் உண்டு. அதாவது நகற்திட்டம் வெளிவந்துள்ள முறையும், இந்நகற திட்டம் குறித்துச் செய்தியாளர் தெரிவிக்கும் விமர்சனங்களுமே அதன் நம்பகத்தன்மைக்கும் எதிர் காலத்தில் அதன் செயற்பாடு குறித்த கேள்வியையும் எழுப்புகின்றன.

இதில் முதலாவதாகக் குறிப்பிட வேண்டியது இந்நகற் திட்டம் குறித்து அமைச்சரவையில் ஆராயப்படவில்லை என்பதாகும். இந்நிலையில் இந்நகற் திட்டம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதா! அங்கீகரிக்கப்படக் கூடியதா! என்ற சந்தேகத்தையே ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது. இந்த நிலையில், இதனை அரசாங்கத்தின் தீர்வுத்திட்ட நகல் என எவ்வாறு கூறமுடியும்!

இதேவேளை இத்தீர்வுத்திட்ட நகல் குறித்து விமர்சனம் செய்துள்ள ஏ.எப்.பி. செய்தியாளரான அமல் ஜெயசிங்கா, அரசியல் அமைப்பு மாற்றத்துடன் தொடர்புடைய இத்தீர்வுத்திட்டத்தை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியுமா! என்ற கேள்வியையும் எழுப்புகின்றார்.

அதாவது பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையே இல்லாத ஒரு கட்சியால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஒரு அரசியல் யாப்பு மாற்றத்தைச் செய்ய முடியுமா! என்ற ரீதியிலேயே கேள்வி எழுப்பப்படுகின்றது. இந்த வகையில் அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் காலத்தை இழுத்தடிப்பதற்கானதொன்று என்றே கருதப்படுகின்றது.

இவ்வாறான கருத்துக்கள், விமர்சனங்கள் கண்களை மூடிக்கொண்டு வைக்கப்படும் விமர்சனங்கள் அல்ல, கடந்த காலத்திற் சந்திரிகா அரசாங்கத்தின் நடவடிக்கைகளே இதற்குக் காரணங்களாகும்.

எடுத்துக்காட்டாக, ஜனாதிபதித் தேர்தலின் போது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை ஜூலை 15 ஆம் திகதிக்குள் ஒழிப்பதாக வாக்குறுதி அளித்துப் பதவிக்கு வந்த சந்திரிகா அரசாங்கம் தற்பொழுது அவ்வாறான காலவரை எதையும் தாம் கூறவில்லை எனக் கூறுகின்றது. அதாவது அன்று ஆட்சியைப் பிடிப்பதற்காக அளித்த வாக்குறுதியை ஆட்சியைப் பிடித்தவுடன் காற்றில் பறக்கவும் விட்டுள்ளது.

இதே போன்றதொரு நிலை அரசின் இனப் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்திற்கும் ஏற்படும் வாய்ப்பே அதிகமுண்டு. ஏனெனில், தீர்வுத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான எந்தவித அரசியல், இராணுவச் சூழ்நிலையும் தற்பொழுது இல்லை. ஆனால் அரசாங்கத்திற்கு அன்று ஜனாதிபதி தேர்தல் ஒழிப்பு முறை தேவைப்பட்டது போன்று இன்று இனப் பிரச்சனைக்கான தீர்வு நகல் தேவையாகவுள்ளது. அவ்வாறு இல்லாது அரசு நேர்மையாக நடந்து கொள்வதாக இருந்திருப்பின் தீர்வுத்திட்ட நகல் அமைச்சரவையிற் பிரஸ்தாபிக்கப்பட்டுப் பின்னர் பாராளுமன்றத்திற் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆனால் இத்தீர்வுத்திட்ட நகலானது எந்த வேளையிலும் அரசால் மறுக்கப்படலாம். அதாவது சிங்களவரிடம் இருந்து இதற்கு எதிர்ப்புக் கிளம்பும் போதோ, அன்றி இராணுவத் தீர்வில் தமிழர் விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிக்க முடியும் எனக் கருதும் போதோ இத்தீர்வுத்திட்ட நகலை அரசு நிராகரிக்கலாம். அப்பொழுது இத்தீர்வுத்திட்ட நகலை நிராகரிப்பதற்கு அரசிற்கு நிரம்பவே வாய்ப்புண்டு. ஏனெனில் அரசு தரப்பில் இருந்து உத்தியோக பூர்வமாக அது வெளியிடப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, அமைச்சரவையின் அங்கீகாரம் அதற்கு அளிக்கப்படவில்லை என்பதை வைத்து இது நிராகரிக்கப்படலாம்.

இவ்வாறான நிலையில், சந்திரிகா அரசாங்கத்தின் தீர்வுத்திட்ட நகலில் உள்ள அதிகாரப் பரவலாக்கல் என்பதை விடத் தற்பொழுது அந்நகலின் நம்பகத்தன்மையே முக்கியமாகிறது. ஏனெனில் சந்திரிகா குமாரதுங்க தனது கடந்த கால ஆட்சியில் அரசின் மீதான நம்பிக்கைத் தன்மையையே கேள்விக்குள்ளாக்கியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## துவிச்சக்கரவண்டியிலிருந்து விமானம்வரை..

### கைத்துப்பாக்கியிலிருந்து விமான எதிர்ப்புக் கருவிகள்வரை

# -விடுதலைப் போரின் செல்நெறி

ஆரம்பத்தில், தமிழ் மக்களுக்கு எதிரான சட்டங்களை இயற்றிய சிங்கள அரசு, சட்டங்களினால் தமிழ் இனத்தை ஒடுக்கியது.

இத்தகைய சட்டங்களுக்கு எதிராக தமிழ் மக்கள் குரல் எழுப்பினர். சாத்வீக வழியில் சட்டமறுப்புப் போராட்டம் செய்தனர். ஆனால் சிங்கள அரசோ, மேலும் மேலும் தமிழருக்கு எதிரான சட்டங்களைப் பிறப்பித்துத் தமிழரை ஒடுக்கியது. தாம் இட்ட சட்டங்களை நிலைநாட்ட, சைக்கிள்களில் ஏறிய சிங்களப் பொலிஸ் படை, சட்டத்தை எதிர்த்த ஒருசில இளைஞர்களைத் தேடி அட்டகாசம் புரிந்தது.

துவிச்சக்கரவண்டிகளில் ஏறிவந்த பொலிசார், கைத் துப்பாக்கியாலும், உள்ளூர்த் தயாரிப்பு ஆயுதங்களாலும் தாக்கப்பட்டனர். துவிச்சக்கரவண்டித் தேடுதல் தோற்றுப் போனது.

ஆக்ரோசம் அடைந்த பொலிசார், தனித்த ஒரு ஜீப்வண்டியில் ஏறி புலிவேட்டையில் ஈடுபட்டனர். இந்த ஜீப்புக்களும் தாக்கப்பட்டன. தனித்த ஜீப் வண்டித் தேடுதலும் தோற்றுப் போனது. ஒருசில இளைஞர்கள் என்பது, ஒருசில பத்து இளைஞர்களாக மாறியது.

இதைத் தொடர்ந்து, தொடர் வாகனங்களில் தேடும் பணி தொடங்கியது. தொடர் வாகனங்களைக் கண்ணிவெடிகள் வரவேற்றன.

கண்ணிவெடித் தாக்குதலுக்குப் பாதுகாப்புத் தேட தொடர்வண்டிகளுடன் 'பவல்' போன்ற கவசவாகனங்கள் இணைக்கப்பட்டன. பவலும் கண்ணியில் சிதற, தமிழீழத்தின் ஒரு பகுதியில் இராணுவ பவனிகளும் நிறுத்தப்பட்டன.

தேடிவரும் இராணுவத்தை, தேடி அழிக்கும் நிலைக்கு புலிகள் வளர்ந்தனர். இப்போது கடற்படையும், விமானப்படையும் இராணுவத்துடன் இணைந்துகொண்டன. இதேவேளை ஒருசில பத்து இளைஞர்கள், ஒருசில நூறு இளைஞர்களாக வளர்ந்தனர்.

இப்போது கடல் ஒரு போர்க்களமாக மாறியது. இராணுவத்தின் விநியோக வழியாகவும், புலிகளின் போக்குவரத்துப் பாதையாகவும் கடல் மாறியது. கடலில் இராணுவ அட்டகாசங்கள் அதிகரித்தன. மீனவர்களும் - போராளிகளும் பெரும் துன்பத்தைச் சந்தித்தனர். கடற்பரப்பில் சண்டை ஆரம்பமானது. கடற்படையின் தனித்த படகுகள் குறிவைக்கப்பட்டன. தனிப்படகுகள் ஓடி ஒளித்தன. தாக்குதல் படகுகள் 'வயர்லெஸ்' சாதனங்களுடன் வந்தன. அவையும் தாக்கப்பட்டன. பாரிய கப்பல்கள் துணைக்குப் போயின. அவையும் மூழ்கடிக்கப்பட்டன. இப்போது கப்பல்-படகுப் பவனி கடலில் நடக்கிறது.

தரையில் கட்டுப்பாட்டை இழந்த சிங்களப் படை, கடலால் கட்டுப்படுத்த முயன்று அதிலும் தோல்வி கண்டுவிட்டது. ஒருசில நூறு இளைஞர்கள் ஒருசில ஆயிரமாகப் பெருகினர்.

ஆகாயத்தில் ஏறி தரையையும், கடலையும் கட்டுப்படுத்த சிங்களப் படை முயன்றது. உலங்கு வானூர்திகள் - சிறுரக குண்டுவீச்சு விமானங்களில் ஏறி தமிழரை ஒடுக்க முயன்றது. இவையும் ஆங்காங்கே தாக்குதலுக்கு உள்ளாகின. பெரும் விமான அணிகள் வானில் அணிவகுத்தன. இராணுவமும் - கடற்படையும் விமானப்படையில் தங்கிநின்றன. இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் வீழ்த்தப்பட்டதும், சிங்களப் படை அமைத்த ஆ ரயக் கோட்டைகள் சரிந்து விழுந்தன. ஒரு சில ஆயிரம் பல்லாயிரமாகியது.

இப்போது ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களை விமானங்களில் பொருத்தி விமானப்படையை அதிநவீனப்படுத்தி போராட்டத்தை அழிக்கச் சிங்கள அரசு முயல்கின்றது.

ஆனால், சிறீலங்கா அரசுக்கு இதுவரையும் ஒரு உண்மை புரியாமல் இருக்கின்றது. அதாவது, துவிச்சக்கர வண்டியில் சென்று போராட்ட விதைகளைக் கிளறி எறிய முயன்ற பொலிசார், பின்னர், ஜீப்பிற்கும் கனரக வாகன அணிகளுக்கும் மாறினர். ஆனால் ஜீப்பாலோ, பவல்களாலோ போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. மாறாக பிரமாண்டமாக வளர்ந்துவிட்டது. இது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உலகிற்கே தெரிகின்றது.

சைக்கிள்களில் ஏறி, போராட்டத்தை ஒடுக்கமுயன்ற சிங்களப்படை இப்போது, ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களைப் பூட்டிய விமானத்தில் ஏறி போராட்டத்தை ஒடுக்கப் போகின்றேன் என்று கர்ச்சனை செய்கின்றது.

அதேவேளை, ஒருசில இளைஞர்களுடன் தொடங்கிய விடுதலைப் போராட்டம் இன்று, பல்லாயிரக்கணக்கான போராளிகளைக் கொண்ட ஒரு விடுதலைச் சேனையாக வளர்ந்துள்ளது. கைத்துப்பாக்கியுடன் உள்ளூரில் செய்யப்பட்ட சாதாரண துப்பாக்கிகளைப் பிடித்திருந்த புலிவீரர்களின் கைகள் இன்று, விமான எதிர்ப்புக் கருவிகளைப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டன.

சிங்களப் படைகளின் ஆயுத பலமும் ஆள்பலமும் அதிகரித்திருக்கின்றனதான். ஆயினும், அதனால் எமது போராட்டத்தை அழிக்கவும் முடியவில்லை, போராட்ட வளர்ச்சியைத் தடுக்கவும் முடியவில்லை. மாறாக போராட்டத்தை அது வளர்த்தே விட்டுள்ளது.

அரசு இப்போது தேடிக்கொண்டிருக்கும் அதி நவீன ஆயுதங்களும், முன்னையவற்றைப் போல தோல்வியையே காணப்போகின்றன. நாளைய சம்பவங்கள் இதை நிரூபிக்கும்.

ஆழங்குறைந்த கடலுக்கு நீருந்து விசைப்படகே சிறந்தது. அதை வாங்கினால் புலிகளை வரவிடாமல் செய்யலாம் என்றது சிங்களக் கடற்படை. ஆனால், புலிகள் வராமலா விட்டார்கள்! வந்ததுடன் நின்றுவிடாமல், நீருந்து விசைப்படகுகளையும் அல்லவா பக்குவமாக எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ளது போன்ற நிலப்பரப்பில் திறமையான முறையில் தரைச் சண்டை பிடிப்பதற்கேற்ற ரி55 டாங்கி இருந்தால், புலிகளை ஒரு 'வாங்கு வாங்கலாம்' என்றது சிங்கள இராணுவம். வாங்கிக் கொடுத்த டாங்கிகளை புலோப்பளையிலும்-பூநகரியிலும் வைத்து, புலிகள் வாங்கிச் சென்றுவிட்டார்களே!

துவிச்சக்கர வண்டிகளில் திரிந்து தேடியோர், விமானங்களில் பறந்து தேடியும் கண்டது என்ன!

கைத்துப்பாக்கியைத் தூக்கிப் போரிடத் தொடங்கிய புலிகள் இயக்கம் இன்று, ஒரு விடுதலைச் சேனையைத் தமிழீழத்தில் அணிவகுத்து வைத்திருக்கின்றது.

# ஆயுதம் ஏந்திப் போராட வீட்டிற்கொருவர் வருக!

எதிரியின் படை எடுப்பைத் தடுத்து நிறுத்த, வீட்டுக்கு ஒருவர் ஆயுதம் ஏந்திப்போராட முன்வர வேண்டும். துறைசார்ந்த பங்களிப்பின் மூலம், பின்தள ஒத்துழைப்பின் மூலம் முனைப்பாகச் செயற்பட்டு எம்மை நாமே தற்காத்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை உறுதி செய்வோம். அழிக்கவரும் எதிரியை எமது மண்ணிலிருந்து முற்றாக விரட்டுவோம் என வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழீழ நெஞ்சங்களுக்கு ஓர் அறைகூவல் என்ற தலைப்பில் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில்,

எமது எல்லைப் புறங்களில் சிறீலங்கா பேரினவாத அரசின் எக்காளம் எங்கும் எதிரொலிக்கிறது. எதிரியின் போர் ஆயுதங்கள் எம் இனத்தை அழிக்கக் காத்திருக்கின்ற வேளையிது. இன்னும் ஏன் தயக்கம்? எழுந்து வாருங்கள், எதிரி யை விரட்டுவோம்.

யாழ். குடாவை ஆக்கிரமிப்பதன் 'மூலம் தமிழ் மக்களை அழித்து, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கலாம் என எதிரி திட்டமிடுகின்றான்.

சிறீலங்காவை ஆட்சிபுரியும் பேரினவாத அரசியல்வாதிகளினால் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளையிட்டு அக்கறையில்லை என்பதை காலம் எமக்குத் தெட்டத் தெளிவாக உணர்த்திவிட்டது.

எதிரி யாழ். குடாவைக் கைப்பற்றி, தமிழின அழிப்பை மேற்கொள்ள 15 ஆயிரம் துருப்புக்களைப் பயன்படுத்தினான். தொடர்ச்சியாக ஐந்து நாள் படையெடுத்து பாரிய அழிவுகளை ஏற்படுத்தினான். ஆனால் எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் இராணுவ தந்திரோபாயங்களினால் முழுப்படைகளும் விரட்டியடிக்கப்பட்டது. இது எமது மண்மீட்புப் போராட்டத்தில் புதிய வரலாற்றுப் பரிணாமமாகும்.

இன்று சிறீலங்கா சனாதிபதியும், அமைச்சரவையும், இராணுவ அதிகாரிகளும் மூக்குடைபட்டு, அவமானத்தால் குழம்பிக்கொண்டு குளறுபடியான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் ஸ்திரமின்மையால் சிறீலங்கா அரசு தத்தளித்துக் கொண்டிருக்கிறது. தனது தோல்வியை மறைக்க முயலுகிறான். பெரும் தாக்குதலுக்கு தயாராகிறான். இந்த நேரத்தில் எதிரியின் படைஎடுப்பை தடுத்து நிறுத்த வீட்டுக்கு ஒருவர் ஆயுதம் ஏந்தி, போராட முன்வரவேண்டுமென அழைக்கின்றோம். அதேவேளை, துறைசார்ந்த பங்களிப்பின் மூலம், பின்தள ஒத்துழைப்பின் மூலம் முனைப்பாகச் செயற்பட்டு எம்மை நாமே தற்காத்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை உறுதி செய்வோம். அழிக்கவரும் எதிரியை எமது மண்ணிலிருந்து முற்றாக விரட்டுவோம் என அறைகூவல் விடுக்கின்றோம்' என வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதிரிகளை விட துரோகிகளே ஆபத்தானவர்கள்

தமிழ் இனத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான பிரச்சாரத்திற்கு, 'தமிழ் முகத்தை உடைய' உதிரி-களைப் பயன்படுத்தும் தந்திரத்தை, சிங்கள அரசுகள் நீண்ட காலமாகவே செய்து வருகின்றன. சிங்களப் பேரினவாத பூதத்திற்குச் சேவை செய்யத் தயாராக இருக்கும் இக்கோடரிக் காம்புகளுக்கு, அமைச்சர் பட்டங்களைக் கொடுத்தும், பிரமுகர் அந்தஸ்துக்களை வழங்கியும் - சிங்கள அரசுகள் - இவர்களை எமது போராட்டத்திற்கு எதிரான ஒரு பிரச்சாரப் படையாக மாற்றி வைத்திருக்கின்றன.

தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களைச் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவரைக் கொண்டு சொல்லுவிப்பதைவிட, தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒருவரைக்கொண்டு சொல்லு விப்பது - சர்வதேச சமூகத்தின் மத்தியில் -நல்ல பயனைக் கொடுக்கும் என்ற நயவஞ்சக நோக்குடன், சிங்கள அரசுகள் இவ்விதம் செயற்படுகின்றன. இதன்மூலம் பேரினவாத சக்திகள் பாரிய

> **இரண்டகம் செய்தல் என்பது தமிழினத்திற்குக் கிடைத்த ஒரு சாபக்கேடோ எனச் சந்தேகிக்கும் அளவிற்கு, தமிழரின் அரசியல் வரலாற்றில் - ஆங்காங்கே - துரோகங்கள் நிறைந்து கிடக்கின்றன. எட்டப்பர்கள், காக்கை வன்னியர்கள் என்ற வரிசைகள்போல் இப்போது - கதிர்காமர்கள், ராஜன் கூல்கள், மோகனரஞ்சன்கள், டக்ளஸ் தேவானந்தாக்கள்......என்ற பெயர்களும் வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்டன. இந்த அற்ப மனிதர்கள் - சிலவேளை - இதையும் பெருமையாகவே எடுப்பார்கள்!**

நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முற்படுகின்றன. அதாவது தமிழர்களே தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை ஏற்க வில்லை - அதை எதிர்க்கின்றார்கள் என்ற கருத்தை உலகநாடுகளில் பரப்பி, எமது விடுதலைப் போராட்டத்திற்கு இருக்கும் 'அரசியல் வீரியத்தை' அல்லது தார்மீக பலத்தை'க் குறைக்க சிங்கள அரசுகள் முயற்சிக்கின்றன. அத்துடன், 'தமிழ் இனத்தை நாங்கள் ஒடுக்க வில்லை, அவர்களுக்கும் எமது அரசில் அங்கத்துவம் வழங்கி உரிய வகையில் அந்தஸ்துக்களையும், கௌரவங்களையும் கொடுக்கின்றோம்' என்ற கருத்தை உலக சமூகத்திற்கு வழங்கும் ஒரு வாய்ப்பாகவும் அதைப் பயன்படுத்து கின்றனர்.

> **'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர் சங்கம்" என்ற ஒரு பெயரைத் தமக்குத் தாமே சூட்டிக்கொண்டு — கொழும்பில் இருந்தபடி இயங்கி வரும் சில கோடரிக் காம்புகள். எமது விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியே தீருவது என்று கங்கணங்கட்டிச் செயற்பட்டு வருகின்றன.**

தன்னலங்கருதியும் பணம் மற்றும் புகழுக்கு ஆசைப்பட்டும் சில 'தமிழ்' பிரமுகர்கள் சிங்களப் பேரினவாதிகளின் இந்தச் சூழ்ச்சிகர அரசியலுக்குப் பலியாகி தமிழினத்திற்குத் துரோகமிழைத்து வருகின்றனர்.

இத்தகைய கோடரிக் காம்புகளின் தமிழ்த் தேசிய விரோதக் கருத்துக்களுக்குக் கொழும்புச் செய்தித்தாள்கள் மிக முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து வருகின்றன. இதேவேளை, இத்தகைய 'தமிழ்' பிரமுகர்களுக்கு வெளிநாட்டுச் சுற்றுலா மேற்கொள்ளுவதற்கான சந்தர்ப்பங்களைக் கொடுத்து - எமது போராட்டத்திற்கு எதிரான பிரச்சார வேலைகளில் ஈடுபடும்படியும் தற்போதைய அரசு பணித்து வருகின்றது.


> **தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களைச் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவரைக் கொண்டு சொல்லுவிப்பதைவிட, தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒருவரைக்கொண்டு சொல்லுவிப்பது - சர்வதேச சமூகத்தின் மத்தியில் -நல்ல பயனைக் கொடுக்கும் என்ற நயவஞ்சக நோக்குடன், சிங்கள அரசுகள் இவ்விதம் செயற்படுகின்றன. இதன்மூலம் பேரினவாத சக்திகள் பாரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முற்படுகின்றன.**

கொழும்பில் இருந்தபடி 'சமாதானக் குழு' என்ற போர்வையில் பேரினவாதிகளுக்கு வக்காலத்து வாங்கும் ஒரு அமைப்பின் தலைவரான மோகனரஞ்சன் என்ற 'தமிழ்' பிரமுகர், சமாதானம் வேண்டி ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டபோது, 'பிபிசி தமிழோசை' அவரைச் செவ்வி கண்டது (20.06.1995). புலிகள் இயக்கத்திற்கு எதிரான கருத்துக்களையும், தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் கருத்துக்களையும் கக்கிக்கொண்டிருந்த இந்தக் கோடரிக் காம்பிடம், யாழ்ப்பாண நிலைமை பற்றி செய்தியாளர் கேட்டபோது, 'முன்னர் சிங்கள இராணுவம் நின்றது, இப்போது தமிழ் இராணுவம் நிற்கின்றது' என்று விசமத்தனமான முறையில் பதில்கூறி, தனது பேரினவாத விசுவாசத்தையும் - தமிழ்த்தேசிய விரோதத்தையும் காட்டியிருந்தார்.

**சிங்கள ஏகாதிபத்திய இராணுவப் பாதுகாப்புத் திரை**



'புலிகளிடம் இராணுவ பலம் இல்லாவிட்டால் தமிழினத்தின் தனித்துவமே அழிக்கப்பட்டுவிடும்' என்று புலிகளுக்கு எதிரான சில சக்திகளே வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்கும்போது, மோகனரஞ்சன் என்ற இந்தப் பேரினவாத அடிவருடி, தமிழரின் விடுதலைப் போரையும் தமிழரின் விடுதலைச் சேனையையும் கொச்சைப்படுத்த முயன்ற விதத்தைத் தமிழினம் தெரிந்தே வைத்துள்ளது.



இதேபோல, 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர் சங்கம்' என்ற ஒரு பெயரைத் தமக்குத் தாமே சூட்டிக்கொண்டு - கொழும்பில் இருந்தபடி இயங்கிவரும் சில கோடரிக் காம்புகள், எமது விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியே தீருவது என்று கங்கணங்கட்டிச் செயற்பட்டு வருகின்றன. அவ்விதமான பெயருடைய ஒரு அமைப்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இல்லை என்று, 'யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்' உத்தியோகபூர்வ அறிக்கைகள் பலவற்றை விடுத்த நிலையிலும் - சில தமிழ்த் தேசிய விரோதிகள் - அந்தப் பெயரைப் பயன்படுத்தி, தொடர்ந்தும் போராட்ட விரோதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, அதன்மூலம் பேரினவாதிகளின் செல்லப்பிள்ளைகளாக மாறி உல்லாசவாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இத்துடன், சிங்கள இராணுவத்துடன் கைகோத்தபடி தமிழ் இன அழிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சில தமிழ்க் குழுக்கள் - 'தமிழ்த் தொகுதிகளுக்கான பிரதிநிதிகள்' என்ற மகுடத்துடன், சிறீலங்கா நாடாளுமன்றிலும் அங்கம் வகித்து சிங்களப் பேரினவாதிகளுக்குச் சேவை செய்து கொண்டிருக்கின்றனர்.

இதேபோல, தேர்தலிலேயே பங்குபற்றாது நின்ற ஒரு உதிரித் தமிழனை அழைத்து, வெளிவிவகார அமைச்சர்

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடிவெள்ளி

சந்திரபோஸ் சுதாகர்

சிறுகதை

கூஷகூஷபிரதான வீதியிலிருந்து நீண்ட கிளையாய் பிரிஞ்சு போற காட்டு வீதியால உள்ளுக்க ஒரு மைல் நடந்தா எங்கட இடம் இருக்கு', நடந்து நடந்து உரமேறிய அவனுடைய கால்கள் சருகுகளை மிதித்தபடி வேகமாய், மிக வேகமாய் நடக்கத் தலைப்பட்டன. ஒரு மைல் எண்டு சொன்னவர் கனதூரம் நடந்திட்டன், இன்னும் இடத்தைக் காணயில்லை' நினைத்தபடி அடிக்கடி திரும்பிப்பார்த்தான். காடு அமைதியாய், மிக அமைதியாய் அவனுடைய மனதைப் போலவே எந்த செயற்பாடுமில்லாமல் கிடந்தது. நடந்தான் காட்டின் அமைதியில். தன்னை இழந்திருந்தவனின் காலில் கட்டை இடறியது. 'ஆ..' காலைப் பிடித்தபடியே அமர்ந்தான். அழுத்திப் பிடித்த கைவிரல்களையும் தாண்டி குருதி கொப்பளித்தது. கண்களை இறுக மூடினான்.

'ரெத்தம் போகப் போகுது பொத்திப்பிடி' துணியோடு ஓடிவரும் அம்மா ஞாபகத்துக்கு வந்தாள். 'காயப்பட்டா, பட்ட இடத்தை வாயால உறிஞ்ச வேணும்' தங்கையின் அறியாத வயது வாசகம் எல்லாம் நினைவில் நின்றன. காயம் மறந்து போனது. இலைகளை உருவி காயத்தைக் துடைக்க முயன்றவன் 'தடயம் விடாமல் நடந்து வரவேணுமென்று அவர் சொன்னவர்' நினைத்தபடி நிலத்தைப் பார்த்தான். உதிர்ந்த சருகுகள் ஐந்தாறில் இரத்தம் ஒட்டிக்கொண்டிருந்தது. எடுத்து காற்சட்டைப் பைகளில் போட்டுக்கொண்டான். 'இன்னும் கொஞ்சத் தூரந்தான் கெதியில நடந்தாப் போயிடலாம்' நடந்தான். திடீரெனப் பறவைகள் பெருங்குரலெடுத்து கத்தத் தொடங்கின. அந்தச் சத்தம் கவிதைகளாகி

*மனதில் விழுந்தது.*

*மழை விழுந்து*

*சிறு நதிகள் மண்ணில் பாயும்*

*உயிர் இழந்து*

*பலமலர்கள் கொடிபிரியும்.....*

அவன் திரும்பினான். 'மூண்டு மணியாச்சு என்ன மச்சான் திரும்பிப் படுக்கிறாய்' கடைசிக் காவலை முடித்த சுரேஸ் தேவாவின் தோள் தொட்டுத் திரும்பினான். திடுக்கிட்டு விழித்துக்கொண்ட அவன் சுற்று முற்றும் பார்த்தான். 'என்னடாப்பா அப்பிடிப் பாக்கிறாய்' கேட்டபடி நண்பனைப் பார்த்தான். 'ஒண்டுமில்லை சுரேஸ். சும்மா ஒரு கனவு' அவன் சிரித்தான். 'கனவில ஆர்?' 'அம்மாவும் தங்கச்சியும் காயத்துக்கு மருந்து போடுற மாதிரி' சொல்லிவிட்டு கட்டைவிரலைப் பார்த்தான். அது எப்போதோ நகத்தை இழந்து சொத்தியும் கோணலுமாய் வேறொரு நகத்தைத் தத்தெடுத்து வைத்திருந்தது. 'வீட்ட இருந்து நான் இயக்கத்துக்கு வரேக்க இந்த கட்டை விரல்ல கட்டை அடிச்சு காயம் வந்தது. ஆனா அதுக்குப்பிறகும் ரெண்டு தரம் வீட்டையும் போட்டு வந்திட்டன். அப்டியிருந்தும் இந்தக்கனவு...' இது கனவா அல்லது நினைவுகளின் பசுமையாய்ப்போன 'உண்மைகளின் பிரதிபலிப்பா! புரியாமல் எழுந்தான். குட்டை குட்டையாய், பரட்டையாய், கருமையாய் நின்ற மரங்களில் இருந்து பறவைகள் சிறகடித்து வான் நோக்கி எழுந்தன. இவன் மனம்... 'சரி சரி யோசிக்காமல் முகத்தைக் கழுவு, இண்டையப் பொழுது எப்பிடிப் போகப் போகுதோ பாப்பம்'. சொல்லிவிட்டு துப்பாக்கியை விரல்களால் அழுத்தினான் சுரேஸ். கூட்டில் இருந்து ஒரு கரிக்குருவி மேலெழுந்து பறந்தது. தேவா இடுப்புப் பட்டியில் தொங்கிக் கொண்டிருந்த தண்ணீர் கானை எடுத்து தண்ணீரை கைகளில் விட்டு முகத்தை அழுத்திக் கழுவினான். தூக்கம். கனவு.. அந்த அதிகாலை எல்லாமே மெல்லக் கழுவப்பட்டது. தூரத்தில் ஒன்றைத் துரத்தியபடி ஒவ்வொன்றாய் வேட்டொலிகள் வந்து காதுகளில் மோதியது. படுத்திருந்தவர்கள் எல்லோரும் திடுக்கிட்டு விழித்து, நிலைகளுக்குத் தாவினார்கள். 'கவனமாய் பருங்கடாப்பா, அடிச்சடிச்சு முன்னேறப் பாப்பான், சில வேளை சூடு நிண்டாலும் முன்னேறி வருவான். விடக்கூடாது'. சொல்லிவிட்டு நடந்தான் தேவா.

எல்லா இரவுகளுமே இப்படித்தான் நிமிடத்திற்கு ஒரு தடவை விழிக்க வேண்டியிருக்கும். தூக்கம் கண்களை மறந்துவிடும் எதிரியை நிலையிலிருந்து வெளியேறவிடாமல் தடுக்கின்ற குண்டுகளின் வேகத்தைப்—போல இவர்களின் விழிகளும் நிலை நோக்கியிருக்கும். துப்பாக்கி ரவைகள் தலைக்குமேலே பறந்தன. சிலகுண்டுகள் முன்னால் வீழ்ந்து வெடித்துச் சிதறின.

'சென்றியில் நின்றவர்கள் தேவாவைப் பார்த்துக் கேட்க, ஒருத்தரும் சடவேண்டாம். பயத்தில் பொழிஞ்சு தள்ளுறான்' சொல்லிவிட்டுச் சிரித்தான் அவன். இவர்கள் அவனோடு சிரிப்பில் கலந்தார்கள். சாப்பாட்டிற்கு முன்னொன்று சாப்பாட்டிற்கு பின்னொன்று என்ற வைத்தியர் சொல்வதைப் போல உறக்கத்திற்கு முன், உறக்கத்திற்குபின் என்று எதிரி ஒரு விதியை வைத்திருக்கிறான். எப்போதெல்லாம் சடவேண்டுமென்று தோன்றுகிறதோ அப்போதெல்லாம் சுடுவான். இது பயத்தின் வெளிப்பாடு. தம் நிலைகளைத்தாக்கிவிடுவார்களோ என்ற அச்சத்தில் எழுகின்ற வெறி. இந்த வெறியை மௌனம்தான் அடக்கும். துப்பாக்கிகள் மௌனமாய் இருந்தன. தூங்கிவிடவில்ல. ஒவ்வொரு நிலையாய் நோட்டம் விட்டுக்கொண்டு வந்த சுரேஸ் இவனருகே வந்தான். 'என்ன மச்சான் கடுமையாய் யோசிக்கிறாய்' கேட்டுவிட்டு அருகில் இருந்தான். 'ஒண்டுமில்லையடாப்பா நான் இயக்கத்துக்கு வரேக்க தங்கச்சிக்குப்பத்து வயது. ஆறு வருசமாச்சு. இப்ப அம்மாவுக்கும் தலை நரைச்சுப் போச்சு. எங்கட போராட்டத்தின்ர வளர்ச்சியைப் போல, இந்த சமூகமும் நிறைய முன்னேறியது. முன்னேறின ஒரு சமூகம் அடிமையாய் இருக்கக்கூடாதெல்லே! அதுதான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன் சொல்லிவிட்டு வானத்தை அண்ணாந்து பார்த்தான்.'

அண்ண அது அருந்ததி... அது றோகினி.. அது ஆரஞ்சு நிறத்தில.. கிழக்கால அது.. ஏலுமெண்டா நீ சொல்லுபாப்பம்' தெரியாத போது கேள்வியைத் தொடுத்தாள் தங்கை. தேவாவிற்கு தெரியும்' தங்கைக்கு அந்த நட்சத்திரத்தின் பெயர் மறந்து விட்டதென்று. ஆனாலும் சோதிப்பதற்காய் ஏதோ ஒரு நட்சத்திரத்தின் பெயரைச் சொன்னான். 'ஓ அதுதான்' அவள் சொல்ல 'போடி மொக்கு, உனக்குத் தெரியாது. அது **விடிவெள்ளி**'. 'ஓ அதுதான் அதுதான்' சொல்லிவிட்டு ஓடி வந்து இவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டாள். இவன் வானத்திலிருந்து பார்வையை விலக்கி 'லீவில போய் தங்கச்சியக் காணேலாமப் போச்சு' மனதில் உழன்று கொண்டிருந்த எல்லா எண்ணங்களையும் கொட்டி விட்டதால் எற்பட்ட தெளிவு இவன் முகத்தில தெரிந்தது. போராளி என்பவன் பந்தபாசங்களுக்கு அப்பாற்பட்டவனில்லை. அவனுடைய நேசிப்பு வித்தியாசமானது. அந்தநேசிப்புக்களுக்கான தியாகம், பரிசு எல்லாமே வித்தியாசமானது. ஆனாலும் தனது சமூகத்திலிருந்து அவன் அப்பாற்பட்டவனில்லை. சுரேஸ் கைகளைத் திருப்பி நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது நேரம் மூன்று நாற்பத்தைந்து நிலவு தொடுவானத்தில் எட்டிப் பார்த்தது. கிழக்கு வானம் போல் நெற்றியில் சின்னதாய் குங்குமம் பூசியிருந்தது. திடீரென ஒரு வினோத ஒலி காதைக் குடைந்தது.

'என்னடாப்பா சத்தம், வடிவா காது குடுத்துக்கேள். இப்பவும் கேக்குது. கேக்.. தேவா சிரித்தான் 'மேல்பல்லும், கீழ்பல்லும்

**தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...**


*முன்னேறு... முன்னேறு.. மடிய மடியத்தான் விடுதலைப் பூ மலரும்*
*காலிழந்து கையிழந்து உடல் உருக்குலைந்து கிடந்தாலும்*
*உயிர் இருக்கும் வரை முன்னேறு -ஏனெனில்*
*இழப்பதற்கு எதுவுமே இல்லாதபோது பெறுவதற்கு நிறைய*
*இருப்பதால் முன்னேறு.... கடைசி மூச்சு*
*வரை முன்னேறு...*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






சண்டை பிடிக்கினம் அதுதான் வேட்டொலி. பேய்க்குளிர் குளிருது' என்றான் சரேஸின் தலையைத்தொட்டுப் பார்த்தவன் தலையைத் தடவிப்பார்' என்றான் சரேஸ். கைகளை உயர்த்தினான் 'ஆ. ஆ. கைவிறைச்சப் போச்சடாப்பா' சொல்லிவிட்டு கைகள் இரண்டையும் சேர்த்து ஒன்றோடு ஒன்றாக உரசினான். அந்தக் கதகதப்பான சூடு உடலுக்கு இதமாக இருந்தது. அவன் மெல்ல எழுந்தான் 'சரேஸ் நீ இரடாப்பா நான் போய்ப் பார்த்திட்டுவாறன்.' நண்பனைத் தடுத்துவிட்டு தேவா எழுந்து ஒவ்வொரு நிலையாய் நடந்து நடந்து ஒவ்வொரு அடியாய் எடுத்து வைக்க வைக்க, பனி இருதயம் வரை தாக்கியது. ரோமக் கால்கள் சில்லிட்டன. உடல் நடுங்கியது. பயத்தால் அல்ல குளிரால்.

'இது போராட்டப்பாதை, பயணம் நீண்டது. கொடிய விலங்குகளும் கொடிமலர்களும் கால்களை இடறும். எங்கு சறுக்கினாலும் ஆபத்து. கொள்கை செத்துவிடும்' மனதில் உறுதியோடு நடந்தான். ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவர் இவனைப் போலவே மனம் நிறைய உறுதியான எண்ணங்களைச் சுமந்திருந்தனர். குளிர் கலந்த காற்று, முகத்தில் மோதியது. உப்பும், உவருமாய் ஒரு வாசம். திடீரென வோக்கி அலறியது இரைச்சலை மட்டுப்படுத்தினான் 'கலோ. தேவா. கலோ. கலோ. விட்டு விட்டு வந்த வார்த்தைகள் தொடர்ந்து அறுந்து போனது. தூரத்தில் வேட்டொலிகள் கேட்டன. 'என்ன அவசரமோ, ஏன் கூப்பிட்டாரோ. நெஞ்சம் பதைபதைத்தது. இரைச்சலை அதிகப்படுத்தி மீண்டும் முயன்று பார்த்தான். 'கலோ. கலோ. சுந்தரண்ணை. தெளிவில்லாமல் கிடக்கு கலோ.' இவனுடைய முயற்சி வீணாகிப் போக 'அறுந்து போவார் குழப்பிறாங்கள் மனதுக்குள் திட்டியபடி ஆத்திரமாய் நிமிர்ந்தான் வோக்கியல் குரல் கேட்டது . தேவா. அவசரம் மச்சான் உடன என்ர இடத்துக்கு பதினைஞ்சு பேரைக் கூட்டிக்கொண்டு நீயும் வா. அவசரம் கலோ. கலோ. நான் சொல்லுறது கேட்குதாடாப்பா' ஓமண்ண உடன வாறம் அவுட் பண்ணுங்கோ. சொல்லிவிட்டு இடுப்புப் பட்டியில் வோக்கியைக் கொழுவினான். சரேஸ், நான் பதினைஞ்சு பேரைக் கூட்டிக்கொண்டு போறன், மற்ற பதினைஞ்ச பேரோட நீ இந்த இடத்தில நில் கவனம் என்ன! சொல்லிவிட்டு சரேஸின் முகத்தைப் பார்த்தான் அந்த முகம் இவனைப் பார்த்துக் கெஞ்சியது. பார்த்தியே மச்சான் என்ன விட்டிட்டுப் போறாய்' எல்லார் முகமும் இப்படித்தான் இருந்தது. தேவா அருகில் வந்து நண்பனின் கரங்களைப் பற்றினான். கண்ணீரின் ஒரு துளி இரு கைகளுக்கும் இடையே சூடாய் விழுந்தது.

தேவா முன்னால் நகர்ந்து கொண்டிருந்தான். துப்பாக்கி ரவைகள், செல்துண்டுகள், உடல் சிதறல்கள் எல்லாம் தாண்டி அவனுடைய குழு முன்னேறிக் கொண்டிருந்தது.

*முன்னேறு... முன்னேறு..*
*மடிய மடியத்தான்*
*விடுதலைப் பூ மலரும்*
*காலிழந்து கையிழந்து*
*உடல் உருக்குலைந்து கிடந்தாலும்*
*உயிர் இருக்கும் வரை*
*முன்னேறு -ஏனெனில்*
*இழப்பதற்கு எதுவுமே*
*இல்லாதபோது*
*பெறுவதற்கு நிறைய இருப்பதால்*
*முன்னேறு.... கடைசி வீச்சு*
*வரை முன்னேறு...*

எல்லார் மனதிலும் ஒரு வெறி! வேலிக்குள் புகுந்து வேட்டையாடுகின்ற காட்டு நாயை

விரட்டியடிக்கின்ற வெறி! துப்பாக்கிகள் இயங்கத் தொடங்கின. சரியாக விடியாத பொழுதில் நெருப்பை உமிழ்கின்ற துப்பாக்கியின் ஒளியில் எதிர்காலம் தெரிந்தது. திடீர் என்று வானபரப்பெங்கும் ஒளிவெள்ளம் பாய்ந்தது. தேவா அண்ணாந்து பார்த்தான். 'பராலைட்' பார்த்தவன் திடுக்கிட்டான். பரா அடிக்கிறான் எல்லாரும் படுங்கடா, சொல்லிவிட்டு நிலத்தோடு ஒட்டிக்கொண்டான். இரு திசைகளையும் கிழித்துக் கொண்டு குண்டுகள் பாய்ந்தன. காயம் வேதனை, மரணம், கண்ணீர் எல்லாம் பிறந்த மண்ணில் சொந்த பூமியில் நிகழ்வதுதான் உயர்வு. 'தேவா பரா அடிச்சிட்டாங்கள், கவனமடாப்பா கவனமாய் முன்னேறுங்கோ' சந்தரிடம் இருந்து கட்டளை வந்தது. திரும்பிப் பார்த்தான். பெண்கள் அணியொன்று நிலத்தோடு நிலமாக ஊர்ந்து கொண்டிருந்தது. அதற்கடுத்ததாய் சந்தரின் குழு, அடுத்த பக்கம் ஆண்களும், பெண்களுமாய் எல்லாருக்கும் நடுவில் அவனுடைய குழு. 'வேகமாய் முன்னேறுங்கோ' கட்டளையிட்டான். முன்னேறி வந்த இராணுவம் பின்னோக்கியது. ஆனாலும் செல் சத்தங்கள். குண்டுகளின் கூவல்கள். வேதனை முனகல்கள். அங்கே ஒரு வாழ்விற்கான போராட்டம், விடிந்த வாழ்க்கைக்கான போராட்டம் நடந்துகொண்டிருந்தது. திடீரென ஆகாயம் அலறியது. றொக்கற் மோட்டார்கள் வீழ்ந்து வெடித்தன. வீழ்ந்து வெடித்த குண்டொன்று சிதறிப் பறந்தது. ஆ. அம்மா. 'அண்ணரெண்டு பேர் காயப்பட்டிட்டினம்' தேவா நிமிர்ந்து பார்த்தான். காயப்பட்ட இருவரும் முனகலோடும் முன்னேற எத்தனித்தனர். புதிதாய் ஒரு வேகம் பிறந்திருந்தது. நிலத்தோடு நிலமாய் குனிந்து நடந்தான். காயப்பட்ட இரண்டு பேரையும் மருத்துவக் குழுவிட்ட சேர்க்க வேணும். நினைத்தபடி கரிகாலன் ஒரு கைகொடு மச்சான் தூக்குவம் அவன் அருகே வர இரண்டு போராளிகளையும் தூக்கினார்கள். தேவா முன்னால் நடந்தான் காயப்பட்ட போராளியின் நெஞ்சிலிருந்து குருதி வழிந்து இவன் தேகத்தில் ஓடியது. அண்ணா. ஆண்ணா அதோ அது அருந்ததி அது றோகினி. அது ஆரஞ்சநிறத்தில். அவளுடைய உதடுகள் அசைந்தன. கைகள் கிழக்கு நோக்கி நீண்டன. 'கிழக்கால அது. விடி. வெள்ள்ளி' மீண்டும் உதடுகள் அசைந்தன. மருத்துவக் குழுவை நோக்கி வேகமாய் நடந்தான். அருகில் வந்து போராளியை இறக்கி தூக்குக் கட்டிலில் (ஸ்ரெச்சரில்) வைத்தான். குனிந்து முகம் நோக்கினான். வானத்தில் நட்சத்திரங்கள் சிரித்தன. பூமியில் இருள். இன்னமும் அவளுடைய உதடுகள் 'கிழக்கால அது விடி. வெள்..ள்ளி' முணு முணுத்தன. கைகள் உயர்ந்து கிழக்கைக் காட்டின. பார்த்தான் 'விடிவெள்ளி' தெரிந்தது. பழைய நினைவுகள் இதயத்தைத் தாக்கியது நீண்ட பெருமூச்சு காற்றில் கலந்தது. வேதனை மனதைத் தாக்க உரமேறிய உறுதியோடு திரும்பினான். தூரத்தில் அவனுடைய குழு முன்னேறுவது தெரிந்தது. வேகமாய் அதை நோக்கி ஓடினான்.

# எதிரிகளை விட...

என்ற பொறுப்பைக் கொடுத்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சர்வதேசப் பிரச்சாரம் செய்யும்படி சந்திரிகா அரசு அனுப்பியது, இனப்பற்று என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் அந்தக் கோடரிக்காம்பு, தமிழினத்தை விலைகூறி விற்றுத் திரிகின்றது.

தமிழராக இருந்தபடியும், தமிழ் மண்ணில் வாழ்ந்தபடியும் கல்விகற்று - அறிவுழைப்பினராக மாறிய இந்தத் தமிழர்கள், தமது அறிவை - அறிவுக் கூர்மையை தமிழினத்துக்கு எதிராகவே பயன்படுத்தும் அவல வரலாற்றை என்னவென்பது!

'இரண்டகம் செய்தல்' என்பது தமிழினத்திற்குக் கிடைத்த ஒரு சாபக் கேடோ எனச் சந்தேகிக்கும் அளவிற்கு, தமிழரின் அரசியல் வரலாற்றில் - ஆங்காங்கே - துரோகங்கள் நிறைந்து கிடக்கின்றன. எட்டப்பர்கள், காக்கைவன்னியர்கள் என்ற வரிசைகள்போல் இப்போது - கதிர்காமர்கள், ராஜன்கூல்கள், மோகனரஞ்சன்கள், டக்ளஸ்தேவான ந்தாக்கள்...என்ற பெயர்களும் வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்டன. இந்த அற்ப மனிதர்கள் - சிலவேளை - இதையும் பெருமையாகவே எடுப்பார்கள்!

இன்று - இவர்களின் துரோகச் செயற்பாடுகளுக்குப் பரிசாக இவர்களைப் புகழ்ந்துபாடும் பேரினவாத சக்திகள் - நாளை - தமது தேவை முடிந்தபின், இவர்களைத் தூக்கி எறிந்துவிடுவார்கள். ஆயினும், இந்த 'அற்ப மனிதர்கள்' வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள்தான் கிடப்பார்கள்.

'எதிரிகளைவிட, துரோகிகளே ஆபத்தானவர்கள்' என்று தலைவர் பிரபாகரன் கூறிய கருத்து ஒன்று, இந்த இடத்தில் நினைவுக்கு வருகின்றது. தமிழ் இனத்தின் எதிரிகள் தமிழர் போராட்டத்திற்கு ஏற்படுத்திய பாதிப்புக்களை விட, தமிழ் இனத்தைச் சேர்ந்த துரோகிகள், தமிழர் போராட்டத்திற்கும், தமிழ்த் தேசிய வளர்ச்சிக்கும் உண்டுபண்ணிய நாசங்கள் மிக மிக அதிகம்.

## இலண்டனில் நடைபெற்ற
# 'எழுச்சி கானங்கள் - '95

தமிழீழ விடுதலைப் பாடல்களை முழுமையாகக் கொண்ட 'எழுச்சி கானங்கள்-'95 என்ற இசை நிகழ்ச்சியொன்று, 26.08.95 சனிக்கிழமை இலண்டனிலுள்ள வெம்பிளி பிறண்ட் நகர மண்டபத்தில் விடுதலைப் புலிகளின் (பிரித்தானியக் கிளை) கலை, பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டது. தாயக விடுதலைக்காகத் தம்முயிரை ஈய்ந்த மாவீரர்களுக்கும், மக்களுக்குமாக இரு மணித்துளிகள் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு, எழுச்சிகானங்கள் பற்றிய அறிமுக உரையுடன் "கடலிலே காவியம் படைப்போம்..." என்ற பாடலுக்கான வாத்திய இசை முழங்க நிகழ்ச்சி




தொடங்கப்பட்டது.

'ஏறுது பார், கொடி ஏறுது பார்...' என்ற தமிழீழத் தேசியக் கொடிப் பாடலுடன் தொடங்கிய இசை நிகழ்ச்சியில், 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்...' என்ற எழுச்சிப் பாடல் இறுதிப் பாடலாக அமைந்தது. கொடிப் பாடலைப் பாடும்போது, தமிழீழத் தேசியக் கொடியைத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தாயகத்தில் ஏற்றிவைக்கும் காட்சி அகன்ற திரையிற் காண்பிக்கப்பட்ட சமயம் சபையோர் அனைவரும் உணர்ச்சி வசப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். 30 கலைஞர்கள் பங்குபற்றிய இந்நிகழ்ச்சியில் மொத்தம் 30 விடுதலைப் பாடல்கள் பாடப்பட்டன. பாடல்கள் ஒவ்வொன்றும், தமிழீழத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சோதனைகளையும், சாதனைகளையும், அதன் பரிணாம வளர்ச்சிகளையும் பொருத்தமான இன்னிசையுடன் வெளிப்படுத்தி நின்றமையால் சபையோரின் உணர்வுபூர்வமான கரகோசப் பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டன. இரண்டு இளம் பாடகர்களுடன், இளம் வாத்திய இசைக் கலைஞர் ஒருவரும் பங்கெடுத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. பாடல்கள் யாவும் வாத்திய இசையுடன் ஒன்றித்து இனிமை சேர்த்தமை, எழுச்சி கானங்கள்-95 இன் ஒரு படிமுறை வளர்ச்சியாக அமைந்தது. இடைவேளையைத் தொடர்ந்து, தமிழீழப் புனர்வாழ்வு நிதிக்கான நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு நடைபெற்றது. அச்சீட்டிழுப்பில் மூன்று இலக்கங்கள் நல்வாய்ப்பு இலக்கங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

விடுதலைப் பாடல்களுக்கிடையில், 09.09.95 இல் இலண்டன், அலெக்ஸ்சாந்திரா பலசில் (ALEXANDRA PALACE, WOODGREEN) நடைபெறவுள்ள எழுச்சி மகாநாடு பற்றிய அறிவிப்பும் பதினொரு விடுதலைப் பாடல்களை உள்ளடக்கிய வாத்திய இசை வடிவில் அமைந்த ஒலி இசைத்தட்டு வெளியீடு பற்றிய அறிவிப்பும்

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்.

www.tamilarangam.net



தியாகத்தைப் போற்றுவோம்! திலீப தீபத்தை ஏற்றுவோம்!

சயனைட்டைக் கழுத்தில் கட்டி சமர் செய்த வீரன்!
சாத்வீகத்தை ஆயுதமாக்கி சாவை அணைத்த தீரன்!

# தியாகி திலீபனின்

## எட்டாவது நினைவுநாள்



தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லை எனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகி விடும்.
மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது.

- திலீபன்

இடம் : HENRI-DUNANT STR-65
UNIVERSITAT-ALTE-PH
45131 ESSEN

காலம் : 16 - 09 - 1995
பிற்பகல் 5.00 மணி

### அஞ்சலிக்கும் கலைமலர்கள்

❋ திலீபதீபம் — நடனத்தொகுப்பு

❋ சந்திரிகாபுராணம் — கதாப்பிரசங்கம்

❋ திலீபராகம் — தமிழிசை

திலீபனின் நினைவில் ஒன்று கூடுவோம்!
விடுதலைப் பாதையில் நடைபோடுவோம்!!

தமிழீழ விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம்
யேர்மனிக்கிளை

---

# மாவீரர் நாள் விழா

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக்கிளை நடாத்தும் 1995 ம் ஆண்டிற்கான மாவீரர் தின நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள்

☆ தனியாகவோ அல்லது அமைப்புகள் சார்ந்தோ கலந்து கொள்ளலாம்.

☆ இயல், இசை, நாடகம் என்பன மாவீரர் தியாகங்கள், வாழ்க்கை, தேசிய விடுதலை போன்றவற்றை முன் நிறுத்துவதாக அமைய வேண்டும்.

☆ தனிநபர் கூடியது 10 நிமிடங்கள், அமைப்புகள் கூடியது 20 நிமிடங்கள் வரை நிகழ்ச்சிகளை வழங்கலாம்..

☆ அனைத்து நிகழ்ச்சிகளும் அதன் பிரதிகளும் விழா அமைப்பாளரால் மேற்பார்வை செய்தே அனுமதிக்கப்படும்.

☆ விண்ணப்பத்துக்கான கடைசித் திகதி : 30 - 09 - 95.

தொடர்புகட்கு - தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக்கிளை

☎ 43 - 58 - 11 - 42


---

## ஈழத்தமிழர்கள் ஒன்றிணைந்து நடாத்தும் எழுச்சி மகாநாட்டிற்கு

### இதுவரை ஒழுங்குசெய்யப்பட்ட பயண ஒழுங்குகள்

EAST HAM - C & A , Burges Rd
ALPERTON - Outside Tube Station
NEW MALDEN - Varshi Food store
WALTHAMSTOW - Opposite Lloyd Park, Forest Rd
SOUTHALL - Duvaraka stores
ILFORD - Nathan's Stores, Ilford Lane
CROYDON - Best Food Stores
TOOTING - Sivaraj Stores
& Sharmila Stores

09 - 09 - 1995 , Saturday, 1.00 p.m.
ALEXANDRA PALACE, N22



☎ 0181 - 471 4300 / 0956 - 314 370

■ பஸ் வண்டிகள் பகல் 11.00 - 11.30 மணிக்கு புறப்படும்

---

விளம்பரப்படுத்தப்பட்டது. (இவ் இசைத்தட்டு விரைவில் வெளியிடப்படவுள்ளது)

விடுதலைப் புலிகளின் சார்பில் உரையாற்றியவர், 'நாம் இங்கு இவ்வாறான கலை நிகழ்ச்சிக-




ளைக் கண்டு மகிழ்சிகொள்ளும் அதேவேளை, எமது உடன்பிறப்புக்கள் குண்டு வீச்சுக்கு மத்தியில் அழிந்து கொண்டிருக்கிறார்கள். இருந்தும் இவ்வாறான நிகழ்ச்சிகளிற் திரட்டப்படும் பணம் எமது மக்களைச் சென்றடைவதால் நாம் ஒருவகையிற் திருப்திப்படுகின்றோம்' எனக்கூறினார். மேலும் சிறீலங்காவின் திட்டமிட்ட தமிழின அழிப்பின் மத்தியிலும், விடுதலைப் புலிகள் தரை, கடல், வான்வெளி வரை போராட்டத்தை வளர்த்துள்ளதோடு, எதிரியின் ஆக்கிரமிப்பிலிருந்து எம்மக்களைப் பாதுகாப்பதற்குத் தம்மலான சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர். அனைத்துலக நாடுகளின் நல்லாசிகளையும், உதவிகளையும் பெறுவதற்காகச் சிறீலங்கா அரசு ஒரு புறம் அரசியற் தீர்வுக்கான ஆலோசனையை முன்வைத்துக்கொண்டு, மறுபுறம் எம்மினத்தை அழிப்பதற்கான பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளத் தீவிரமாக முயன்று வருகிறது. இவ்வின அழிப்பில் இருந்து எம்மினத்தைக் காப்பாற்றப் பெருந்தொகையான நிதி உடனடியாகத் தேவைப்படுகின்றது. புலம்பெயர்ந்து வாழும் நாமே இப்பெரும் பணிக்குத் தராளமாக உதவி எம்மினத்தைக் காப்பாற்ற முன்வர வேண்டும். அத்துடன் சிறீலங்கா அரசு செய்கின்ற பொய்யான பிரச்சாரங்களை, நாம் வாழும் நாடுகளில் அம்பலப்படுத்தி, எமது விடுதலைப் போராட்டத்தையும், அதை முன்னெடுத்துவரும் விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கும்படி அனைத்துலக அமைப்புக்களையும், அரசுகளையும் வற்புறுத்த வேண்டும். இந்நோக்கத்திற்காக ஒழுங்கு செய்யப்படும் எழுச்சி ஊர்வலங்கள், எழுச்சி மகாநாடுகள் ஆகியவற்றில் எல்லோரும் அணிதிரள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இறுதியாக வாத்திய இசைக் கலைஞர்களின் இசை வெள்ளத்துடன் இணைவாக, சபையோர் வழங்கிய கரகோசத்தின் மத்தியில், 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்....' என்ற பாடலுடன் எழுச்சி கானங்கள் -'95 நிறைவுபெற்றது.

நல்வாய்ப்புச் சீட்டிழுப்பின்

1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளுக்கான இலக்கங்கள்

| | |
|---|---|
| முதலாவது: - | 001632 |
| இரண்டாவது:- | 000284 |
| மூன்றாவது: - | 000086 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரித்தானியாவில் மாபெரும்
# எழுச்சி மாநாடு




★ சிறீலங்கா அரசு நடாத்தும் திட்டமிட்ட தமிழினப் படுகொலைகளைக் கண்டித்தும், சிறீலங்காவிற்கான ஆயுத விற்பனையை நிறுத்தும்படி பிரித்தானிய அரசைக் கோரியும்,

★ தமிழ் மக்களின் நியாயபூர்வமானதும், சர்வதேச சட்டங்களுக்குமுட்பட அமைந்ததுமான சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தமிழீழப் போராட்டத்தை, பிரித்தானிய அரசு அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரியும், நடாத்தப்படும் எழுச்சிமாநாடு.

★ FINSBURY PARK TUBE STATION, WOODGREEN TUBE STATION, KINGS CROSS ஆகிய இடங்களிலிருந்து TRAIN மூலம் ALEXANDRA PALACE STATION க்கு வரலாம். FINSBURY PARK, WOODGREEN TUBE நிலையத்திலிருந்து W3,இலக்க பஸ்வண்டிகள் ஒவ்வொரு 4 நிமிடமும் மண்டப வாசலான PALM COURT க்கு வந்தடையும் வசதியும் உண்டு.

## திகதி:- 09. 09. 1995 சனி

## நேரம்:- பிற்பகல் 1.00 மணி

## இடம்:- ALEXANDRA PALACE WOOD GREEN LONDON N 22

U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593

L.T.T.E
Post Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1899 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag,.Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7612943

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்